விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள் : இருபது

Valampurii

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 16 திங்கட்கிழமை (31.12.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 012

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சர்வதேச அழுத்தங்களுக்காக முகாம்களை அகற்ற முடியாது!



## இறுக்கமான நிலைப்பாட்டில் இராணுவம்

(கொழும்பு)

சர்வதேச அழுத்தங்களுக்கு அடி பணிந்து வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றிக்கொள்ள முடியாதென இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் பல்கலைக்கான சட்ட மூலம் விரைவில்

(கொழும்பு)

தனியார் பல்கலைக்கழகம் குறித்த சட்ட மூலம் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில் மீண்டும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக பிரதி அமைச்சர் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் காணப்படுகின்ற வர்த்தக சட்டத்தின் கீழ் தனியார் பல்கலைக்கழகங்களை திறக்கமுடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.தனியார் சிற்றூர்தி சேவைகள் இன்றிலிருந்து பணிபுறக்கணிப்பில்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்கள் அனைத்தும் இன்று முதல் சேவைப்புறக் கணிப்பில் ஈடுபடவுள்ளதாக யாழ். பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தலைவர் பொ.கெங்காதரன் அறிவித்துள்ளர். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த தாவது,

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் சாலையில் கடந்த காலங்களில் இணையத்தினால் நேரக்கணிப்பாளர்களை ஆவரங்கால், கோப்பாய், முத்திரைச்சந்தி, ஆகிய இடங்களில் கடமைக்கு அமர்த்தி பருத்தித்துறையிலிருந்து யாழ்ப் (20ஆம் பக்கம் பார்க்க)

## மாத்தளையில் பச்சை மழை

(மாத்தளை)

மாத்தளையிலுள்ள ஓவில்லபகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பச்சைமழை பெய்துள்ளது. சுமார் 5 நிமிடங்கள் வரை பெய்த இம்மழை பின்னர் ஓய்ந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இப்பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சிவப்பு மழை மற்றும் மஞ்சள் மழை ஆகியன பெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-1)

## நீரில் மூழ்கி மாணவன் பலி

(கரவெட்டி)

வடமராட்சி கடற்பரப்பில் குளிக்கச் சென்ற மாணவன் ஒருவன் நீரில் மூழ்கிப் பலியாகியுள்ளான். இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மணற்காடு குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## மாயன் முடிந்த சில நிமிடங்களில் விட்டு விட்டு ஒளிர்ந்த சூரியன்

### நாசா விஞ்ஞானிகள் தகவல்

(கொழும்பு)

மாயன் கலண்டர் கடந்த 27ஆம் திகதியுடன் முடிந்தது. எனவே அன்றுடன் உலகம் அழியும் என்ற பீதி சர்வதேச நாடுகளை ஆட்டிப் படைத்தது. இக்கருத்தை விஞ்ஞானிகள் மறுத்தாலும், விண்ணில் நிகழும் மாற்றங்களை கண்காணித்து கொண்டுதான் இருந்தனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## சஞ்சீவ பண்டார தாக்கப்பட்டார்

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார மீது நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள் இருவரது நினைவு தினத்தை அனுஷ்டித்து பல்கலைக் (19ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றுக்குள் வீழ்ந்து சிறுமி மரணம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மணற்காடு பிரதேசத்தில் கிணற்றில் குளிக்கச் சென்ற 16 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குளிக்கச் சென்ற வேளை சிறுமி கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சிறுமியின் உடல் தற்போது மந்திகை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸாரின் தடுப்பில் மருத்துவர் சிவசங்கர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மருத்துவர் இ.சிவசங்கர் இராணுவத்தினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட தகவலை யாழ்.மருத்துவ சங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

கைதான சிவசங்கர் கொக்காவில் இராணுவ முகாமில் சுமார் 6 மணித்தியாலங்களாக தடுத்து வைக்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி மாங்குளம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு தடுப்பில் இருந்து வருவதாக யாழ்.மருத்துவ சங்கத் தலைவர் வைத்திய நிபுணர் நிமலன் தெரிவித்துள்ளார்.

மேற்படி மருத்துவரின் கைது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் க.பொ.த சாதாரணப் பரீட்சை எழுதுவதற்காக விடுகையில் வந்துள்ளார். பரீட்சை முடிந்த பின்னர் மீண்டும் இராணுவ முகாம் செல்ல விரும்பவில்லை. நான் அதிலிருந்து (19ஆம் பக்கம் பார்க்க)

மலரும் புத்தாண்டு உங்கள் அனைவருக்கும் சமாதானமான மகிழ்ச்சியான வளமான ஆண்டாக அமைய வாழ்த்துகிறோம்!

2013 ஆம் ஆண்டில் உங்களின் அல்லது உங்களது குடும்ப அங்கத்தவர்களின் பெயர்களை தேருநர் இடாப்பில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கவும்.
உங்கள் வசதிக்காக கீழுள்ள கால அட்டவணையைப் பார்க்கவும்

வாக்காளர் பட்டியல் (BC படிவம்) குடும்பத் தலைவரிடம் கையளிக்கப்படல் (ஜூன்-ஜூலை)
பூர்த்தி செய்யப்பட்ட BC படிவத்தை கிராம அலுவலர் மீளப் பொறுப்பேற்றல் (ஜூன்-ஜூலை-ஆகஸ்து)
பட்டியலைக் காட்சிப்படுத்தல், முறையீடு (அக்டோபர் – நவம்பர்)
உரித்து, ஆட்சேபணை, விசாரணை (நவம்பர்-டிசம்பர்)

பஃவ்ரல், 12/3, றொபர் றெஸ்,
றொபர் குணவர்தன மாவத்தை, கொழும்பு 06
தொலை பேசி 011 2514441/2
தொலை நகல் 011 2514443
பஃவ்ரல்

Federal Republic of Germany
The Federal Government

(தேர்தல் திணைக்களத்தின் திட்டங்களின்படி இத்திகதிகளில் மாற்றம் ஏற்படலாம்)
உங்கள் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை அறிந்துகொள்ள பின்வரும் இணையத்தளத்தைப் பார்க்கவும் www.slelections.gov.lk

(அ-1961)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 30 புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு திரும்ப விருப்பம்

(சிட்னி)

படகு மூலம் அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசித்த மேலும் 30 புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடுதிரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

நவ்றூ தீவு முகாமில் தங்கியிருப்பதனை விடவும் நாடு திரும்புவது உசிதமானது என புகலிடக் கோரிக்கையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

புகலிடக் கோரிக்கை விண்ணப்பங்களை முன்வைக்கப் போவதில்லை என குறித்த இலங்கையர்கள் குறிப்பிட்டதாக அவுஸ்ரேலிய குடிவரவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சட்டவிரோத ஆள்கடத்தல் காரர்களின் வார்த்தைகளை நம்புவதனால் பயனில்லை என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளதாக குடிவரவுத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதிகளவிலான புகலிடக் கோரிக்கையாளர்கள் நவ்றூ தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மனுஸ் மற்றும் நவ்றூ தீவுகளுக்கு அதிகளவிலான புகலிடக் கோரிக்கையாளர்களை அனுப்பி வைப்பதன் மூலம் பலர் நாடு திரும்ப விருப்பம் தெரிவிக்க கூடுமென திணைக்களம் தெரிவித்துள்ளது. (ந-11)


## காணி விற்பனைக்குண்டு

திருநெல்வேலிப் பகுதியில் சிறந்த சுற்றாடலில் நிலப்பரப்பு நிலப்பரப்பு 2 குழி 12 (கிணறு உட்பட) உடன் விற்பனைக்கு உண்டு.

தரகர் தேவையில்லை

தொடர்பு: 0215683286

(1359)



## சாவகச்சேரியில் வேலை வாய்ப்பு

சாவகச்சேரி நகரில் இயங்கும் முன்னனி கணினி நிறுவனத்துக்கு Ms office தெரிந்த இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

(பயில விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்)

தொடர்புகளுக்கு - 0779906299

(A-1967)


## யா/தாவளை சைவத்தமிழ் வித்தியாலயம்

## புதிய பாடசாலை ஆரம்பித்தல்

இடம் : யா/தாவளை சைவத் தமிழ் வித்தியாலயம்

காலம்: 01.01.2013 (செவ்வாய்க்கிழமை)

நேரம்: மு.ப. 9.00

தலைவர்: திருமதி க.மகிழ்ராஜன்

**நிகழ்ச்சி நிரல்**

- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- புதிய பாடசாலை பெயர் பலகை திரைநீக்கம்
  (திரு.அ.சோதிநாதன் (வலி.மேற்கு பிரதேச செயலாளர்)
- வரவேற்புரை
- தலைமையுரை
- ஆசியுரை
  சிவஸ்ரீ சபாவாசுதேவக் குருக்கள்
  (சிவன் தேவஸ்தானம்-சித்தன்கேணி)
- விருந்தினர் உரை
- நன்றியுரை
- பாடசாலை கீதம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இங்ஙனம்
பாடசாலை சமூகம்

(1356)

# சிறுவர் போராளிகள் இலங்கையில் இல்லை - ஐ.நா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சிறுவர் போராளிகள் கிடையாது என ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது. 2009ம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்தனைத் தொடர்ந்து சிறுவர் போராளிகள் முற்று முழுதாக கிடையாது என அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் சிறுவர் போராளிகள் தொடர்பான நிலைமைகள் குறித்த அறிக்கையை முடிபுக்கு கொண்டுவரும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் வரைவுத்திட்ட யோசனை அண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதில் சிறுவர் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்து சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. (ந-11)

# ஆடை ஏற்றுமதியில் இலங்கைக்கு 311 கோடி அமெ.டொலர் வருவாய்

ஆடைத் தொழிற்சாலைகளின் ஏற்றுமதி மூலம் அதிகளவிலான அந்நிய செலாவணி பெறப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தவருட முதல் ஆறுமாத காலப்பகுதியினுள் ஏற்றுமதி மூலம் 311 கோடி அமெரிக்க டொலர் வருவாயாக பெறப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தத் தொகை, இலங்கை ஏற்றுமதி மூலம் கிடைக்கப்பெற்ற வருவாயியல் 63 சத வீதமாகவுள்ளது. இது தவிர, இரசாயனம், பதப்படுத்தப்பட்ட உணவு போன்ற பொருட்களின் மூலமும், கணிசமான அந்நியச் செலவாணி ஈட்டப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட பிறிதொரு அறிக்கைக்கு அமைய இந்தஆண்டு முதல் அரை இறுதி யாண்டு காலப் பகுதினுள் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதி மூலம்496 கோடியே 50 லட்சம் அமெரிக்க டெலர்கள் ஏற்றுமதி மூலம் பெறப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-11)


## செல்லா சினிமா யாழ்ப்பாணம்




10.30, 2.30, 6.30, 9.30



## பழைய கட்டிடம் விற்பனைக்கு

இல.30, குமாரசாமி வீதி, திருநெல்வேலியில் பழைய வீட்டு கட்டிடம் முழுமையாக விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0773614630, 0773173584

(1353)



## பிள்ளையார் இன்

40% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 40 % விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-


பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(A-1962)


## இதய அஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 04 | 28 |
| 03 | 12 |
| 1959 | 2012 |

### அமரர் சண்முகம் சபாநடேசன் (மாஸ்ரர்)

காரைநகர் ஈழத்து சிதம்பர மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் கௌரவ உறுப்பினர் சண்முகம் சிவஞானம் அவர்களின் அன்புச் சகோதரர் சண்முகம் சபாநடேசன் திடீர் சிவபதம் அடைந்ததை அறிந்து நாம் அதிர்ச்சியிலும் வேதனையிலும் உறைந்துள்ளோம்.

அன்னாரின் ஆத்மா ஈழத்து சிதம்பர ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேதஸ்ரீ நடராஜப் பெருமானின் நித்திய ஆனந்தத்தில் சாந்திபெற பிரார்த்திப்பதோடு, பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், உறவுகள் மற்றும் அனைவருக்கும் ஆறுதல் கூறுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை,
ஈழத்து சிதம்பரம், காரைநகர்.

(C-1968)

## 16-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி சபீண்டீகரண அழைப்பும்

### அமரர் Dr. நடராஜா பத்மநாதன்



கடந்த 16.12.2012-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமெய்திய எமது குடும்பத் தலைவர் **அமரர் Dr. நடராஜா பத்மநாதன்** (குழந்தைப்பிள்ளை வைத்தியர்) அவர்களின் அந்தியேஷ்டி கிரியைகள் 31.12.2012 திங்கட்கிழமை (இன்று) கீரிமலை அந்தியேட்டி மடத்திலும் அன்றைய தினம் சபிண்டீகரண கிரியைகள் அவரது பருத்தித்துறை இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வந்து அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

செட்டித்தெரு,
பருத்தித்துறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(C-1966)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நிம்மதி

கடற்கரையோரமாக பெரியவர் ஒருவர் கையாலே மணலைக் கீறிக் கொண்டிருந்தார். எதையோ தேடுவது போலும் இருந்தது. மெதுவாக அவர் அருகில் சென்று, "எதைத் தொலைத்து விட்டுத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

அவர் சாவகாசமாக என்னை நிமிர்ந்து பார்த்து; "நிம்மதியைத் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

இவர் கூறியதைக் கேட்டதும் எனக்கு ஒரு மாதிரியாகி விட்டது. இருந்தாலும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு, நிம்மதி இந்த மணலிலே கிடைக்காது" என்றேன்.

"சரி... இன்று வசமாக நம்மிடம் ஒருவர் மாட்டிக் கொண்டார். அவருடன் கதைக்கலாம் என்று ஒரு பக்கமாகச் சென்று கதை கூற ஆரம்பித்தேன்.

ஒரு பெரிய ராஜா இருந்தார். அவருக்கு அனைத்து வசதிகளும் இருந்தது. இருந்தாலும் ஒரேயொரு குறை. அது என்னவென்றால் நிம்மதி இல்லை என்ற குறை.

அவர் நிம்மதியைத் தேட ஆரம்பித்தார். உடனே அதற்கான முயற்சிகளிலே தீவிரமாக இறங்கி மேதைகளை அழைத்து, "நிம்மதி எங்கே இருக்கிறது?" என்று விசாரித்தார்.

ராஜாவின் கேள்விக்கு ஒவ்வொருவரும் வெவ்வேறு கோணத்தில் விளக்கங்களை வழங்கினார்கள்.

எந்தப் பதிலும் ராஜாவுக்குத் திருப்தி அளிக்கவில்லை. ஆதலால், அவர்கள் அனைவரையும் "போய் வருமாறு" சொல்லி அனுப்பி வைத்து விட்டார்.

நாட்கள் கடந்த நிலையில்; ஒருநாள் அவர் மாளிகையின் உப்பரிகையிலே நின்று கொண்டிருந்தார்.

அச்சமயத்தில் தெருவிலே ஒரு பிச்சைக்காரன் மிகவும் உல்லாசமாக பாட்டுப்பாடிக் கொண்டு போய்க் கொண்டிருந்தான். குரலிலே ஒரு சந்தோசம். நடையிலே ஒரு மிடுக்கு. அவனிடம் சற்றுகூட கவலை தென்படவில்லை.

உடனே ராஜா இதை அவதானித்து விட்டு தனது ஏவலாளிகளை கைதட்டி அழைத்தார். "உடனே ஓடிப்போய் அந்த யாசகனை அழைத்து வருமாறு" உத்தரவு பிறப்பித்தார்.

இவர்கள் போய் அழைத்ததும் அவன் வர மறுத்து விட்டான்.

இவர்கள் ராஜாவிடம் வந்து விடயத்தைச் சொன்னார்கள்.

ராஜாவுக்கோ மிகவும் ஆச்சரியம்.

"சரி அவன் என்னதான் சொல்கிறான்?" என்று விசாரித்து வருமாறு ஏவலாளிகளை மீண்டும் அனுப்பினார்.

"என்னைப் பார்க்க வேண்டுமென்றால், ராஜாவைத் தெருவிற்கு வரச் சொல்லுங்கள்" என்று பதிலனுப்பினான்.

அதை வந்து ராஜாவிடம் சொன்னார்கள். இருந்தாலும் ராஜாவுக்கு கோபம் வரவில்லை. இவ்வளவு சுதந்திர வேட்கையோடு, இருக்கிறவன் சாதாரண மனிதனாக இருக்க முடியாது என்று தன்னுள் நினைத்தார்.

உடனே தெருவோரம் வந்து அந்தப் பிச்சைக்காரன் அருகில் சென்று "நீ கவலைப்படாமல்- சந்தோஷமாக பாடிக்கொண்டு போகிறாயே... அது எப்படி உன்னால் முடிகிறது?" என்று கேட்டார்.

"ஏன் அப்படி கேட்கிறீர்கள்?"

"எனக்கு அரண்மனையிலே அனைத்து சுகபோகங்களும் இருந்தும் நிம்மதி இல்லை. இது ஏன் என்று தெரியவில்லை. உன்னைக் கேட்டால் தெரியுமென்று நினைத்தேன். ஆதலால் உன்னை அழைத்தேன்- அதற்கு நீ மறுத்து விட்டாய்" என்றார்.

பிச்சைக்காரன் கடகடவென்று சிரித்தான்.

"மகிழ்ச்சிக்குத் தடையாக இருப்பது இந்த மாளிகைதான். இதை உதறி எறிந்து விட்டு வெளியே வந்தால் நிம்மதி தானாகவே தேடி வந்து விடும்" என்றான்.

"நான் அரசன். எனக்கு கடமைகள் இருக்கிறது... அதை விட்டுவிட்டு எப்படி வர முடியும்?" என்று ராஜா கேட்டார்.

"இரண்டும் ஒரே நேரத்திலே எப்படி கிடைக்கும்? என்னைப் பாருங்கள்; என்னிடம் எதுவுமே கிடையாது, நிம்மதியாக வாழ்கிறேன்" என்றான்.

ராஜா சந்தோஷப்பட்டு தன்னுடைய மேலங்கியை எடுத்து அவனுக்குப் பரிசாகக் கொடுத்தார். அவன் சிரித்தவாறே அதை "வாங்கமாட்டேன்" என்றான்.

"இதை நீங்கள் எனக்கு கொடுப்பதால் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. இந்தப் போர்வையை வாங்கிக் கொண்டால் அதைப் பெற்ற நேரத்தில் இருந்து அதைக் காப்பாற்றுவதற்கு கவலை வந்து விடும். அதன்பின் தூக்கம் வராது" என்று கூறி விட்டு அவன் சந்தோஷமாக போய் விட்டான்.

இப்போது நிம்மதி எங்கே இருக்கிறது என்பதை ராஜா தெரிந்து கொண்டார். அந்த இடத்திற்கு தன்னாலே போக முடியாது என்பதையும் புரிந்து கொண்டார்.

இப்படி இந்தக் கதையை கடற்கரை மணலிலே கீறிக்கொண்டு அந்தப் பெரியவர் சொல்லி முடித்தார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

### தனியார் பேருந்து சாரதிகளுடன்

# போக்குவரத்து விதிமுறை குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் சிற்றூர்தி, பேருந்துகளில் கடமை புரியும் சாரதி மற்றும் நடத்துநர்களிற்கான போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் 9.30 மணியிலிருந்து 11.30 மணி வரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் யாழ்.பொலிஸாரினாலும் இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதி பயிற்சியாளரினாலும் பேருந்து சாரதிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டதோடு போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் இ.போ. சபையின் சாரதி பயிற்றுவிப்பாளர் ஜேசுதாஸ் விளக்கமளிக்கையில்,

தற்போது இங்கு விபத்துக்கள் அதிகரிப்பதற்கு சாரதிகள் கவனம் இல்லாமை, மதுபோதையில் வாகனம் செலுதுத்தல், இரவில் நித்திரை விழித்து வாகனம் செலுத்துதல், வீட்டுச் சிந்தனையுடன் வாகனம் செலுத்துதல், பாதை தெரியாமல் வாகனம் செலுத்துதல், முன்னறிவித்தலின்றி வாகனம் செலுத்துதல் போன்றன காரணங்களாக அமைகின்றன.

இதனைவிட முன்னால் செல்லும் வாகனத்திற்கு ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் அதாவது 12 மீற்றர் இடைவெளியில் வாகனத்தைச் செலுத்த வேண்டும்.

பெரிய வாகனங்கள் 9.5 மீற்றர் அளவிலும் சிறிய வாகனங்கள் 11.10 மீற்றர் அளவிலும் சுக்கானை பிடித்து வைத்திருத்தல் வேண்டும். பின்னர் கருத்துரைத்த யாழ்.பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் குணசேகர, யுத்தம் முடிவடைந்து தற்போது யாழில் அதிக சனநடமாட்டம் அதிகரித்துள்ளது.

இதன்போது இங்கு திடீரென பல வீதி விபத்துக்கள் நடந்த வண்ணம் உள்ளன. இதனைத் தவிர்ப்பதற்கு சாரதிகள் போக்குவரத்து விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும். எனினும் மினிபஸ் போக்குவரத்து சாரதிகள் போக்குவரத்து விதிமுறைகளை மீறி நடப்பதாக எமக்கு பொதுமக்களிடமிருந்து தினமும் முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளன என்றார்.

இதேவேளை, யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தலைவர் பொன்னுத்துரை கங்காதரன் கருத்து தெரிவிக்கையில்,

சாரதிகள் தமது பொறுப்புணர்ந்து செயலாற்ற வேண்டும் என்றார். நிகழ்வில் கலந்து கொண்ட ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமல், தாம் சாரதிகள் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கூறினார். (அ-4)

### வினாத்தாள் திருத்தப்படும்

# பாடசாலைகள் 10 ஆம் திகதி திறப்பு

க.பொ.த. (சா/த) பரீட்சை வினாத்தாள் திருத்தும் நிலையங்களாக தெரிவு செய்யப்பட்டுள்ள 78 பாடசாலைகள் எதிர்வரும் ஜனவரி 10 ஆம் திகதி திறக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. 2012 ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) பரீட்சையின் முதலாம் கட்ட மதிப்பீட்டுப்பணிகள் நேற்று முதல் எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி வரை இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீட்டுக் கடமைக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 78 அரசாங்க பாடசாலைகளின் முதலாம் தவணை ஜனவரி 10 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. பரீட்சை மதிப்பீட்டு பணிகளுக்குத் தெரிவு செய்யப்படாத சகல பாடசாலைகளும் முதலாம் தவணைக்காக திட்டமிட்டபடி ஜனவரி 2 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 140 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 140 | 240 |
| தக்காளி | 100 | 100 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30-35 | 30 | 40 | 40 |
| கோவா | 60 | 50 | 80 | 70 |
| கரட் | 100 | 80 | 120 | 140 |
| பூசணி | 30-40 | 30 | 40 | 50 |
| புடோல் | 40-50 | 60 | 60 | 70 |
| வாழைக்காய் | 60-70 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 130 | 160 | 160-180 | 160 |
| பெரிய வெங்காயம் | 95 | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 100 | 120 | 140 | 140 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 50-55 | 50 | 60 | 70 |
| பயற்றங்காய் | 130 | 140 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 110 | 140 | 140 |
| பீற்றூட் | 80 | 90 | 120 | 120 |
| கறிமிளகாய் | 200 | 160 | -- | 200 |
| இராசவள்ளி | 120 | 150 | 100 | 160 |
| போஞ்சி | 100 | 80 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | 110 | 100 | 120 | -- |
| கீரை - 1 பிடி | 5-6 | 10 | 20-30 | 30 |
| தேசிக்காய் | 50 | 90 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | [illegible] | 40 | 30-40 | 35-40 |

## இராசி பலன்

31.12.2012
(மார்கழி 16, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
திருதியை முன்னிரவு 8.06 மணிவரை
பூசம் முற்பகல் 9.45 மணிவரை
இராகுகாலம் 7.59-9.29 மணிவரை
சுபநேரம் 12.29-1.59 மணிவரை

**மேடம்** தொலைபேசி மூலம் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க நினைப்பீர்கள், பயணங்கள் தித்திக்க வைக்கும்.

**இடபம்** நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழும் நாள், குடும்பத்தினர் பாராட்டும் வகையிலான செயலொன்றைச் செய்து காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், மாமன், மைத்துனர் வழியில் மகிழ்ச்சிக்குரிய செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** தொழில் வளர்ச்சி கருதி அனுபவமிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, ஆழ்ந்த சிந்தனையுண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் பெறுவீர்கள், தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள், திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம்.

**கன்னி** உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும், பெருமைகள் வந்து சேர வேண்டிய நாள்.

**துலாம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர், அரசு வழியில் அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** தொழில் நலன் கருதி பிறரிடம் ஆலோசனை கேட்பீர்கள், சொத்துக்கள் சம்பந்தமாக இருந்து வந்த பிரச்சினைகள் விலகும், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** நீங்கள் பெரியளவில் நினைத்த நபர் ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், வாகன பயமுண்டு.

**மகரம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், தொழில் முன்னேற்றமுண்டு, கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்ய முற்படுவீர்கள், குடும்ப மகிழ்ச்சியுண்டு.

**கும்பம்** உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்து கொள்வீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங் கண்டு கொள்வீர்கள்.

**மீனம்** யோகமான நாள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், பூர்வ புண்ணிய கருமங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச நிறுவனங்களை ப.சந்தையில் பட்டியல்படுத்த அரசாங்கம் திட்டம்!

## தனியார் நிறுவனங்களையும் உள்ளீர்க்க நடவடிக்கை-அமுனுகம

இலங்கையில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட- செயற்பட்டுக்கொண்டிரும் கம்பனிகள் காணப்படுகின்ற போதிலும், 288 கம்பனிகளே கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியல் படுத்தப்பட்டுள்ளன.

இந்த எண்ணிக்கையை 2016 ஆம் ஆண்டளவில் இரட்டிப்பாக அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய அதிகமான அரச நிறுவனங்களை பட்டியல்படுத்தவுள்ளதுடன், தனியார்துறை கம்பனிகளும் பட்டியல்படுத்த ஊக்குவிக்கப்படும் என் பிரதி நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

**2012**

இதேவேளை, கொழும்பு பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கல்களை பொறுத்தமட்டில் பெருமளவு சரிவுகளையும், சில முக்கிய மைல்கல்களையும் பதிவு செய்த ஆண்டாக 2012 அமைந்துள்ள நிலையில், புது வருடத்தின் இறுதிக் கொடுக்கல் வாங்கல்கள் வாரம் சீராக நிறைவடைந்திருந்தது.

இலங்கைப் பொருளாதாரத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த மாற்றங்கள், நாணயக்கொள்கையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள், போன்றன வருடம் முழுவதும் பங்குச் சந்தையில் செயற்பாடுகளிலும், தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன.

மேலும், த பினான்ஸ் கம்பனியின் பங்குகளை தேசிய சேமிப்பு வங்கி கொள்வனவு செய்திருந்தமை முதல், ஊழியர் சேமலாப நிதியத்தின் முதல் பங்குளில் முதலீடு செய்யப்பட்டிருந்தமை வரையில் குறிப்பிடத்தக்க ஒரு சில சர்ச்சைகளும், சந்தையின் செயற்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தியதுடன், கடன் பத்திரங்களை வழங்கல், அவிவா என்டிபி நிறுவனத்தின் பங்குகள் ஏஐஏ நிறுவனத்துக்கு கைமாற்றப்பட்டிருந்தமை போன்ற சுமுகமான செயற்பாடுகளும், 2012 இல் கொழும்பு பங்குச்சந்தையில் நடந்தேறின.

அத்துடன் சர்வதேச தரப்படுத்தல்கள் அமைப்பான ஸ்டான்டர்ட் அண்ட் புவர் மூலம், கொழும்பு பங்குச் சந்தையில் புதிய சுட்டியும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தமையும், விசேட அம்சமாக அமைந்திருந்தது.


கடந்த ஆண்டு மொத்தமாக 21 புதிய பொது பங்கு வழங்கல்களும், அறிமுகம்களும் இடம் பெற்றிருந்தன.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தைகள் நிறைவடையும் பொழுது, அனைத்து பங்கு விலைச்சுட்டெண் 5,607.13 ஆகவும், மிலங்கா விலைச் சுட்டெண் 5120.17 ஆகவும், s&p, ஸ்ரீலங்கா 20 சுட்டி 3068.99 ஆகவும் அமைந்திருந்தன.

2012ம் ஆண்டின் ஆரம்பத்தில் முதல் வாரம் நிறைவில் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 5930.52 ஆகவும், மிலங்கா விலைச்சுட்டெண் 5083.13 ஆகவும் அமைந்திருந்தன.

மேலும் வருடத்தின் முதல் வார நிறைவில் 29,752 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றிருந்ததுடன் மொத்த புரள்வு பெறுமதியாக ரூ. 1,937,655,576 பதிவாகியிருந்தது.



உலகின் மிக நீண்ட அதிவேக ரயில் பாதை சீனாவின் தலைநகர் பீஜிங்கிலிருந்து தென் பகுதியில் இருக்கும் குவாங்ஷோ நகர் வரை அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 2,300 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த இரு நகரங்களுக்கும் இடையேயான பயண நேரம் முன்னர் இருபது மணித்தியாலங்களுக்கும் மேலாக இருந்தது. இப்போது அந்தத் தூரத்தை 8 மணித்தியாலங்களில் கடக்க முடியும். இப் புல்லட் ரயில் மணிக்கு 300-350 கிலோ மீற்றர் வேகத்தில் செல்ல வல்லது.

இவ் வேகத்தில் செல்லின் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பை சுமார் ஒரு மணி நேரத்தில் அடைய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# எச்என்பி அசூரன்ஸ் பிரீமியம் கட்டணங்களை டயலொக் ஊடாக செலுத்தும் வசதி

எச்என்பி அசூரன்ஸ் நிறுவனமானது தனது வாடிக்கையாளர்கள் பிரிமியம் கட்டணங்களை எவ்வித தொந்தரவும் இன்றி இலகுவான முறையில் பிரிமியம் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வழிவகுக்கும் வகையில் டயலொக் eZ Cash உடன் அண்மையில் எச்என்பி அசூரன்ஸ் நிறுவனம் கைகோர்த்துள்ளது.

இதன் மூலம் eZ Cash கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு வசதியளிக்கும் முதன்முதலான காப்புறுதி கம்பனிகளும் ஒன்றாக எச்என்பி அசூரன்ஸ் திகழ்கிறது.

இதனால் கையடக்க தொலைபேசியைப் பயன்படுத்தியே கொடுப்பனவை மேற்கொள்ளக் கூடிய வசதியை வாடிக்கையாளர்கள் இப்போது பெறுகின்றனர்.

7.5 மில்லியனுக்கும் அதிகமான டயலொக் கையடக்கத் தொலைபேசி இணைப்பு பாவனையாளர்கள் தமது கையடக்கத் தொலைபேசியில் இலகுவான முறையில் #111# என்ற இலக்கத்தை டயல் செய்வதன் மூலம் eZ Cash கணக்கு ஒன்றிற்காக தம்மைப் பதிவு செய்து கொள்ளலாம்.

## யூனியன் அஷ்யூரன்ஸுக்கு வெள்ளி விருது

நம்பிக்கை என்ற வாக்குறுதியை கட்டியெழுப்பும் வகையில், அண்மையில் நடைபெற்ற SLIM அதி சிறந்த வர்த்தக நாம விருது விழாவில் 2011ஆம் ஆண்டுக்கான வர்த்தக நாம சேவை விருத்தினை வென்ற ஒரே காப்புறுதி நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கிறது என அதன் தலைவர் டாக் பெரேரா தெரிவித்துள்ளார்.

## க.பொ.த.(சா/த)இன் பின்னர் பட்டப்படிப்பிற்கு அடித்தளமாக அமையும் IISEEES இன் கற்கை நெறிகள்

எதிர்கால தொழிற்சந்தைக்கு ஏற்ற வகையில் எமது அடிப்படைக் கல்வியைத் தொடருவோமேயானால் மாத்திரமே சென்ற இடமெல்லாம் சிறப்புக் கிடைக்கும் என்பது தற்போதைய கல்வியாளர்களின் எண்ணக்கருவாகும்.

எனவே இன்றே உள்நாட்டிலோ, சர்வதேசத்திலோ உயர்கல்வியைத் தொடர்வதாயினும் முறையான அடிப்படைக்கல்வி அவசியமாகின்றது.

மிகக் குறுகிய காலத்தில் ஆங்கிலம், தொழில்நுட்பக் கல்வியில் தடம் பதித்த நல்லூர் IISEEES campus உயர்கல்விக்கு ஏற்ற வகையில் தனது சர்வதேச பாடவிதானமான IDFP (International Degree Foundation Program) யை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஆங்கிலம், சிங்களம், கணனி, மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பவற்றை உள்ளடக்கிய இப்பாடநெறி மாணவர்களுக்கு மொழி ஆற்றல், தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்ப அறிவை வழங்குகின்றது. அத்துடன் எந்தவொரு சவாலையும் எதிர் கொள்ளும் விதத்தில் Persanality Development, Leadership training and Communication Skills என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளமை மாணவர்களின் திறன் விருத்தியை அதிகரிக்க ஏதுவாக அமைகின்றது. இப்பாடநெறியைத் தொடரும் இம்முறை GCE O/L எழுதிய மாணவர்களுக்கு இலவசமாக பெறுமதிமிக்க கணனி ஒன்றையும் வழங்குகின்றது IISEEES Nallur campus.

IISEEES வழங்கும் ஆங்கிலப் பாடநெறி Workroom Based Practical English என்ற நவீன எண்ணக்கருவுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட முதற்தர பேச்சு ஆங்கிலப் பாடநெறியாகும். மாணவர்கள் ஆர்வத்துடனும் சரளமாகவும் ஆங்கிலத்தை பிழையின்றி சரியான உச்சரிப்புடன் கதைப்பதற்கு இப்பாடநெறி உதவி செய்கின்றது.

தொழில்நுட்ப பாடநெறிகளை பொறுத்தமட்டில் Network Administration, Hardware Engineering, Mobile phone Repairing மற்றும் Electrical Wiring போன்ற பாடநெறிகளை வழங்குகின்றது. இவற்றை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு உடனடியாக தொழில்வாய்ப்பொன்றை உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ உடனடியாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவும் உள்ளது. தேவைப்படும் மாணவர்களுக்கு தொழில்வழிகாட்டலும் செய்கின்றது.

Diploma in Mass Media பாடநெறி வானொலி அறிவிப்பாளராவதற்கான ஊடகக் கற்றைநெறியாகும். 3 மாத கால இப்பாடநெறியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் ஊடகத்துறையில் தடம் பதிப்பதற்கு அடித்தளம் வழங்குகின்றது.

நீங்களும் IISEEES இன் ஏதேனும் ஒரு பாடநெறியில் இணைய விரும்பினால் 762, பருத்தித்துறை வீதி, நல்லூர் என்ற முகவரியில் நேரில் வந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5,516.49 | 5607.13 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 5,044.58 | 5,120.17 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,034.24 | 3,068.99 ⇧ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** | புரள்வு (ரூபா.மில்.) 1,274.305

**உயர்வடைந்தபங்குகள்(ரூ)** மிரமார்(97.80), சிலோன் லெதர்(w)(6.30), கலமசூ (2600.00),சிலோன் லெதர்(w)(6.00), சிங்கலங்கா(103.00)

**சரிவடைந்தபங்குகள்(ரூ)** நமுனுகுல(73.20),ஆர்பிகோ(69.50),அபான்ஸ் பினான்சியல்(35.60),சுவிஸ்ரெக்(13.10),என்டிபி கப்பிரல்(436.20)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# டாட்டா ஓய்வு பெற்றார்



டாட்டா குழுமத்தின் தலைவர் பொறுப்பிலிருந்து ரத்தன் டாட்டா கடந்த வாரம் ஓய்வு பெற்றுள்ளதுடன் புதிய தலைவராக மிஸ்த்ரி பொறுப்பேற்றுள்ளார்.

பாரம்பரிய சிறப்புமிக்க டாட்டா நிறுவனங்களை கடந்த 50 ஆண்டுகளில், அதிநவீனமயமாக்கி, மிகப் பெரிய குழுமமாக மாற்றிய பெருமை ரத்தன் டாட்டாவுக்கு உண்டு.

இக்குழுமத்தின், 98 நிறுவனங்களில், 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் பணி புரிகிறார்கள்.

டாட்டாவின் 21 ஆண்டு கால தலைமையில், சென்ற நிதி ஆண்டு நிலைவரப்படி விற்றுமுதல் 10 ஆயிரம் கோடி டொலர்களாக பல மடங்கு வளர்ச்சி கண்டுள்ளது.

ரத்தன் டாட்டாவின் இலட்சிய கனவான, ஒரு லட்சம் ரூபாய், நானோ கார் திட்டம் சந்தித்த சோதனைகள் ஏராளம். ஆனால் சற்றும் மனம் தளராமல், மேற்கு வங்கத்தில் இருந்து வெளியேறி, குஜராத்தில் தொழிற்சாலை அமைத்து தனது கனவை நிறைவேற்றினார் ரத்தன் டாட்டா.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 125.42 | 128.68 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 201.49 | 207.69 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 165.23 | 171.03 |
| சுவிஸ் பிராங் | 136.40 | 141.88 |
| கனேடிய டொலர் | 125.29 | 130.04 |
| அவுஸ்திரேலிய டொலர் | 129.15 | 134.34 |
| சிங்கப்பூர் டொலர் | 101.96 | 105.69 |
| ஜப்பான் யென் | 1.44 | 1.49 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.31 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.59 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குறுதி அளித்தபடி சொந்த வலயங்களிலேயே நியமனம் வேண்டும்

## இருவருடகால பணியை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் கோரிக்கை

வெளிமாவட்டங்களுக்கு ஒப்பந்த அடிப் படையில் கடமைக்குச் சென்று கடமையை முடித்த ஆசிரியர்கள் தமது சொந்த வலயங் களுக்கு மீண்டும் தம்மை நியமிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்றைய தினம் ஆனைப்பந்தியில் உள்ள நாவலர் கல்வி நிலையத்தில் நடை பெற்ற பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் ஒன்று கூடலின் போதே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு தைமாதம் முதலாம் திகதி யாழ்.மற்றும் வவுனியா தெற் கைச் சேர்ந்த 70 இற்கும் மேற்பட்ட ஆசிரி யர்களுக்கு வடமாகாண ஆளுநரின் உத்தர வின் பேரில் 2 வருட ஒப்பந்த அடிப்படை யிலான இடமாற்றம் வழங்கப்பட்டுஇருந்தது.

இவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும் போது இரண்டு வருட முடிவில் அவர்கள் தமது சொந்த வலயங்களில் மீண்டும் கடமை யாற்ற முடியும் எனக் கூறப்பட்டு இருந்தது.

இதற்கான நியமனக்கடிதம் முன்னரே வழங்கப்பட்டு இருந்தது.எனினும் தற்போது இவ் இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்பட்டு உள் ளதாக மாகாண கல்வியமைச்சு வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக அறிவித்துள்ளது.

இந்நிலையில் இரண்டு வருட ஒப்பந்தத் தில் பணியாற்றிய ஆசிரியர்கள் தமது சொந்த வலயங்களிற்கு பணிக்கு திரும்ப முடியாத நிலையேற்பட்டு உள்ளது.

இந்நிலையிலேயே பாதிக்கப்பட்ட ஆசிரியர் கள் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் ஒன்று கூடியிருந்தனர்.

இதன்படி அவ் ஒன்று கூடலில் இன்றைய தினம் மாகாண கல்வி பணிப்பாளரிடம் மக ஜர் ஒன்றினை கையளிப்பது என தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் மாகாண கல்வி பணிப் பாளருக்கு கையளிக்கப்படவுள்ள அந்த மகஜ ரில் தெரிவிக்கப்பட்டு உள்ளதாவது,

வடக்கு மாகாணத் திணைக்களத்தின் 2010.12.01 திகதிய NP/ 20/ ET/F/2/DT இலக்கம் கொண்ட கடிதத்தின் பிரகாரம் யாழ். மாவட்டம்,வவுனியா தெற்கு வலயத்திலிரு ந்து வன்னிப் பகுதியிலுள்ள பாடசாலைக ளுக்கு இரண்டு வருட ஒப்பந்த அடிப்படை யில் கடமையாற்றுமாறு நாம் பணிக்கப்பட்டி ருந்தோம்.

இதற்கமைய கீழே கையொப்பமிட்டிருக் கும் நாங்கள அனைவரும் 2012.12.31 ஆம் திகதியுடன் எமது இரண்டு வருட சேவை யினை பூர்த்தி செய்ததுடன் தங்கள் கடிதத் திற்கு அமைவாக எதுவித நிபந்தனைகளும் இன்றி உரிய திகதியில் (2013.01.01) மீண்டும் எமது சொந்த வலயங்களில் கடமையாற்ற முடியும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் தற் போது இத்திகதியில் நாம் முன்னைய வல யங்களு க்கு வருவதற்குத் தடங்கல் ஏற்பட்டு ள்ளது. இவ்விடயம் மேற்படி நியமனக் கடித த்திற்கு முரணானது என்பதை தங்களுக்குத் தெரியப்படுத்துவதுடன் 2013.01.01 இல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு எங்களுக்கு இடமாற்றம் பெறவேண்டிய ஏற்பாடுகளை செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறோம் என் றுள்ளது.

மேலும் இவர்களுக்கு வழங்கப்பட்ட இட மாற்றம் இடமாற்ற சபையினூடாக வழங்கப் படவில்லை எனவும் ஒப்பந்தத்தின் அடிப்ப டையிலேயே வழங்கப்பட்டதெனவும் தெரி விக்கப்படுகிறது.

இரண்டு வருட முடிவில் தமது சொந்த வலயங்களிற்கு எவ்வித தடையுமின்றி சென்று பணியாற்ற முடியும் என பல இடங்களில் உறுதியளிக்கப்பட்டு நியமனக்கடிதம் வழங் கப்பட்ட போதிலும் தற்போது அவ் உறுதியளி ப்புக்கள் யாவும் கல்வியதிகாரிகளினால் பொய்யாக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றனர்.

கல்வியதிகாரிகள் இதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் மனிதவுரிமை ஆணைக் குழுவிற்கு செல்வது என முடிவெடுக்கப்பட்டு ள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இதற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்கும் என இலங்கை ஆசிரி யர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ரா லின் தெரிவித்தார். (அ-2)

## தங்கொட்டுவையில் போலிக்கச்சேரி சுற்றி வளைப்பு; சந்தேக நபர்கள் கைது



(கொழும்பு)

தங்கொட்டுவவை பிர தே சத்தில் இயங்கி வந்த போலி கச்சேரி ஒன்றினைச் சுற்றி வளைத்துள்ளதுடன் அங்கி ருந்து பல்வேறு சட்டவிரோத ஆவணங்களுடன் இருபெண் கள் உட்பட நான்கு சந்தேக நபர்களைக் கைது செய்துள் ளதாக மாராவில பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இந்தச் சுற்றி வளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மாராவில பிரதேசத்தில் வீதியில் சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டியொன்றை மறித்து அதிலிருந்த பெண்கள் இருவரைப் சோதனைக்குட்படுத்திய மாராவில பொலி ஸார் அப்பெண்களிடமிருந்து போலியாக தயாரிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை மற்றும் காணி உறுதி ஒன்றையும் கைப் பற்றியுள்ளனர். இப்பெண்களிடம் மேற் கொள்ளப் பட்ட விசாரணையினையடுத்தே குறித்த போலி கச்சேரி பற்றிய தகவல்களைப் பெற முடிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கச்சேரியினைச் சுற்றிவளைத்த பொலிஸார் அங்கிருந்து கணனி, அச்சு இயந்திரம் (பிரிண்டர்), காணி உறுதிப்பத் திரங்கள், பரீட்சை முடிவுப் பத்திரங்கள், இரண்டு கடவுச் சீட்டுக்கள், பிறப்புச் சான் றிதழ்கள், தேசிய அடை யாள அட்டைகள், ஆட்பதிவுத் திணைக் கள ஆணையாளர் மற்றும் கல்கிஸை காணிப்பதிவு ஆணை யாள ருக்குரிய இறப் ப்ர் முத் திரைகள், சிரேஷ்ட அமைச்சர் ஒருவரின் கடிதத்த லைப்பிலான கடிதம், பல்வேறு இறப் பர் முத்திரைகள் ஆகிய வற்றுடன் போலி முத் திரைகள் ஆறை யும் கைப்பற்றியுள் ளனர்.

சிலாபம் மற்றும் வென்னப்புவ பிர தேச ங்களைச் சேர் ந்த இரு பெண்களு டன் தங்கொட்டுவ பிர தேசத்தைச் சேர்ந்த ஆண்கள் இருவருமே இவ்வாறு கைது செய் யப்பட்டுள் ளனர். (அ-2)


### காணி, வீடு விற்பனைக்கு

வீடு
கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தில் நவீன முறையில் அமைந்த சகல வசதிகளுடனும் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு

காணி
நவக்கிரி, அச்சுவேலியில் 14 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பகுதியா கவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

காணி
தலையாழி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

வீடு
சந்நிதி வீதி, அச்சுவேலியில் சகல வசதிகளுடனும் கூடிய மாடிவீடு விற்பனைக்குண்டு.

சகல தொடர்புகளுக்கும்:
ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்
காணி, வீடு வாங்கித் தருவதற்கும் விற்றுக் கொடுப்பதற்குமான நிறுவனம்
26D, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்
(இ) தொ.பே:- 0779994603

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>உயரம்: 5'<br>கி.பா: 61, 1 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: தொழில்நுட்ப உத்தியோகத்தர் (அவுஸ்திரேலியா)<br>தொ. இல: B -870 | பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>உயரம்: 6'<br>கி.பா: 24<br>தொழில்/ தகைமை: A/L, கனடா (PR)<br>தொ. இல: G -874 |
| பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>உயரம்: 5'11''<br>கி.பா: 51, 2 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: Following Master in finance (உதவிக் கணக்காளர்)<br>தொ. இல: B -871 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>உயரம்: 6'2''<br>கி.பா: 33.75<br>தகைமை: BSc Engineering<br>தொ. இல: G -876 |
| பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 32.5<br>உயரம்: 5' 8''<br>தொழில்/ தகைமை: கல்விமாணி கற்கைநெறி 2ஆம் வருடம் (ஆசிரியர்)<br>தொ. இல: B -872 | பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா.:26.5<br>தொழில்/ தகைமை: கல்வியியற் கல்லூரி தேசிய டிப்ளோமா ஆசிரியர்<br>தொ. இல: G -877 |
| பிறப்பு: 1973 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'6''<br>கி.பா: 27.25, 1 இல் செவ்<br>தொழில்/ தகைமை: ஆசிரியர்<br>தொ. இல: B -873 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>உயரம்: 5' 8''<br>கி.பா: 22.24<br>தொழில்/ தகைமை: கல்வியியற் கல்லூரி தேசிய டிப்ளோமா ஆசிரியர்<br>தொ. இல: G -878 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கொய்தரை வீதியை புனரமைக்க கோரிக்கை

(சாவகச்சேரி)

ஆவரங்கால் கொய்தரை இந்து மயானத்திற்கு செல்லும் வீதி பெரும் சேதமடைந்த நிலையில் சேறும் சகதியுமாக காணப்படுகிறது. சுமார் அரைக் கிலோ மீற்றர் தூரம் சேற்றுடன் நீர் தேங்கி நிற்கின்றது. மயானத்திற்கு செல்லும் மக்கள் வாகனங்களில் செல்ல முடியாதுள்ளதுடன் நடந்து செல்லும் போது கூட சேற்றில் வழுக்கி விழும் நிலை உள்ளது.

இவ் வீதி பருத்தித்துறை வீதியில் இருந்து கப்பூது அந்தண திடலுக்கு செல்லும் குறுகிய தூர பாதையாகும். இவ் வீதியில் குடியிருப்புக்கள் உள்ளதுடன் கப்பூது ஊடாக சரசாலைக்கு செல்லும் பயணிகள் இவ் வீதியை பயன்படுத்துவதும் குறிப்பிடத்தக்கது.

பல காலமாக இவ் வீதியில் மழைநீர் மேவி தேங்கி நிற்பது வழமையானதாகும். எனவே, சம்பந்தப்பட்டவர்கள் உரிய முறையில் நிரந்தரமாக இவ் வீதியை புனரமைத்து உதவுமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். . (அ-3-29)




# வன்புணர்வுக்கு முயற்சித்த குற்றச்சாட்டில் இளைஞன் கைது

## பருத்தித்துறையில் சம்பவம்

(கரவெட்டி)

வடமராட்சி பருத்தித்துறை பகுதியில் மாணவி ஒரு வரை வன்புணர்விற்கு உட்படுத்த முயன்ற இளைஞன் ஒருவரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாகத் தெரியவருவதாவது,

குறித்த 15 வயதுடைய மாணவி, வீட்டிலிருந்து அருகிலிருந்த கடையொன்றிற்குசென்றிருந்த வேளை அவ்விடத்தினைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞன் அங்க சேஷ்டையில் ஈடுபட்டுள்ளான். இவ்விளைஞனிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்ட மாணவி உடனடியாக வீட்டிற்கு விரைந்து சம்பவம் தொடர்பாக தமது பெற்றோரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து மாணவியின் பெற்றோரால் பருத்தித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து சிறுமியை வன்புணர்விற்கு உட்படுத்த முயற்சித்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸார் இளைஞனை கைது செய்தனர். பொலிஸாரின் அறிவுறுத்தலின் படி மாண்வி வைத்திய பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறுவர்கள், மாணவிகள் இவ்வாறான சம்பவங்களை பெற்றோருக்கு தெரிவிக்காமையினால் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு உள்ளான சம்பவங்கள் இடம்பெற்றுள்ள நிலையில் இம்மாணவியின் துணிச்சல் மிக்க செயலால் ஓர் அசம்பாவிதம் தடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-2-24)

# குடும்பஸ்தர் மீது வாள்வெட்டு

## துன்னாலையில் சம்பவம்

(கரவெட்டி)

வடமராட்சி துன்னாலையில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். நேற்றைய தினம் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த நவரட்ணம் ராஜ்குமார் (வயது 31) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

துன்னாலை வடக்கு கரவெட்டியிலுள்ள அவரது வீட்டில் இருந்து வெளியே சென்ற வேளையிலேயே வழியில் இடைமறித்த சில நபர்கள் இவர் மீது வாளால் வெட்டியுள்ளனர்.

குடும்பப் பகை காரணமாகவே இவ் வாள் வெட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் குறித்த விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-24)

# கலை இலக்கிய பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை கலை கலாசார இலக்கிய மன்றத்தின் கலை இலக்கியப் பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நெடியகாடு பிள்ளையார் ஆலய வீதியில் இலக்கிய மன்றத்தின் தலைவரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன், சிறப்பு விருந்தினர்களாக நாடகப் புயல் வெ.முத்துச்சாமி, கலைப் பருதி ந.தேவதாஸ், சிறுகதை எழுத்தாளர் டாக்டர் எஸ்.ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)




# திறப்புக்கான முரண்பாடு கத்திக்குத்தில் முடிந்தது

## இளைஞனின் உயிர் பிரிந்தது

(யாழ்ப்பாணம்)

பாசையூரில் நடைபெற்ற குழு மோதலில் கத்திக்குத்துக்குள்ளாகி இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன்சிகேரா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு பாசையூரில் அல்பேர்ட் பீரிஸ்(வயது-23) என்ற இளைஞன் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்திருந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் உயிரிழந்த இளைஞனின் சகோதரன் விபரிக்கையில், பாசையூரில் உள்ள தேவாலயத்திற்கு ஒளிவிழா நிகழ்விற்கு வந்திருந்த பெண் ஒருவர் தனது துவிச்சக்கரவண்டியை நிறுத்தி விட்டு சென்றார்.

இதன்போது அங்கு நின்ற இளைஞர்கள் சிலர் அப்பெண்ணின் துவிச்சக்கர வண்டியைப் பூட்டி திறப்பினை எடுத்துள்ளனர்.

இதனைப் பார்த்த உயிரிழந்த குறித்த இளைஞர் திறப்பைப் பூட்டி எடுத்த இளைஞர்களோடு திறப்பைக் கொடுக்குமாறு முரண்பட்டதையடுத்தே அங்கு வந்த 5 இற்கும் மேற்பட்ட இளைஞர்களினால் தாக்கப்பட்டு இறுதியில் கத்திக்குத்திற்கு இலக்காகினார் என அவர் தெரிவித்தார்.

மேலும் இச்சம்பவத்தில் காயமடைந்த மற்றொரு இளைஞனான அதேயிடத்தைச் சேர்ந்த ஜஸ்ரின் ஜதீபன் (வயது-22) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞரை கத்தியால் குத்தியவரை தாம் கைது செய்துள்ளதாகவும் கைது செய்யப்பட்டவர் பாசையூரைச் சேர்ந்தவரே எனவும் யாழ். பொலிஸார் தெரிவித்தனர். (அ-4)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு

நாட்டில் நிலவிய அசாதாரண வெள்ளம் காரணமாக மாணவர்களின் இலவச புத்தகங்கள். இலவச சீருடைகள் சேதத்திற்குள்ளாகி இருப்பின் அதிபர் ஊடாக வலயக் கல்வி அலுவலகத்திற்கு தெரியப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலும் அதற்குரிய மாற்று ஒழுங்குகள் வடமாகாண கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்படும் என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்திய சீலன் தெரிவித்துள்ளார். (அ-3)

# அதிபர் நியமனம் பெற்றவர்களுக்கு

அதிபர் நியமனம் அண்மையில் கிடைத்து இதுவரை சேவையாற்றுவதற்கான பாடசாலைகள் கிடைக்காதவர்கள் அந்தந்த வலயக் கல்வி அலுவலகம் ஊடாக விபரங்களை வடமாகாண கல்வி அமைச்சிற்கு தெரியப்படுத்துமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்திய சீலன் அறிவித்துள்ளார். (அ-3)

# உத்தேச வ.செ. திட்டம் நிறைவேற்றப்பட்டது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் அடுத்த வருடத்திற்கான உத்தேச வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் சபையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதேச அபிவிருத்தி தொடர்பாக உறுப்பினர்களால் முன் வைக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் உட்பட பல்வேறு வேலைத் திட்டங்கள் சபையில் இரு தினங்களாக விவாதிக்கப்பட்டு கடந்த வாரம் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் சபை உறுப்பினர்களின் முழுமையான ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டதாக சபையின் தவிசாளர் சி.துரைராசா தெரிவித்தார். (அ-3-29)

# ஆதனங்களுக்கான புதிய வரி மதிப்பீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கான புதிய வரி மதிப்பீடு எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு வரி மதிப்பீட்டு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆதன மீள் மதிப்பீடு சரி பார்க்கப்பட்டு நகர சபை உத்தியோகத்தர்களால் யாழ். விலை மதிப்பீட்டு திணைக்களத்தில் வைத்து தயாரிக்கப்பட்டு மீள மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனங்களுக்கான அறிவித்தல்கள் தயாரிக்கும் பணிகள் நகர சபை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ் அறிவித்தல்கள் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன் ஆதன உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

மதிப்பீடு தொடர்பாக பார்வையிட விரும்புபவர்கள் அலுவலக நேரத்தில் நகர சபை அலுவலகத்தில் பார்வையிடலாம் என நகர சபைத்தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்துள்ளார். (அ-3-29)

# மாநகரசபைக் கீத கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் மன்ற கீதத்தை கருத்தாழமிக்க வகையில் மீள்பதிவு செய்தல் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் ஜனவரி மாதம் 7 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாநகரசபையின் முதல்வர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி.யோ.பற்குணராசா அறிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாநகர சபை எல்லைக்குள் இயங்கும் இசைக் குழுக்கள் பங்கேற்று உயிரோட்டமான மன்ற கீதத்தை சிறந்த முறையில் மீள் பதிவு செய்து தரமான மாநகரசபைக் கீதத்தை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி.மருத்துவ குழுவினர் வன்னியில் மருத்துவ சேவை

## உபகரணங்களையும் அன்பளிப்பு செய்தனர்

(மல்லாவி)

அவுஸ்திரேலிய இலங்கை மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் அவுஸ்திரேலியா புலம் பெயர்வாழ் தமிழ் உறவுகள் மற்றும் அவுஸ்திரேலிய நாட்டு வைத்தியர்கள் நம்நாட்டு சிங்கள, தமிழ் வைத்தியர்கள் உள்ளடங்கிய மருத்துவக் குழுவினர் அவுஸ்திரேலியா வாழ் தமிழரான வைத்தியர் திருமதி காயத்திரி மதன் தலைமையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை கிளிநொச்சி, முல்லை., வவுனியா மாவட்டங்களில் சந்தித்து மருத்துவ சிகிச்சையும் அளித்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு வருகை தந்த இவ அணியினர் 175 மாணவர்களுக்கு பெறுமதியான கற்றல் உபகரணப் பொதிகளை வழங்கியதுடன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு சென்று ஒரு தொகுதி மருத்துவ பொருட்களையும் அன்பளிப்பு செய்துள்ளனர்.

அத்தோடு போரின் போது பாதிக்கப்பட்ட வலுவிழந்தவர்கள் 7 பேருக்கு சக்கர நாற் காலிகளையும் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இதேதினம் முல்லைத்தீவு கோப்பாபிலவு கிராமத்திற்குச் சென்று வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட 175 குடும்பங்களுக்கு பாய், நுளம்பு வலை, குக்கர் உட்பட பல்வேறு பொருட்களை வழங்கியதுடன் சிறுவர்கள், மாணவர்கள் என ஒரு தொகுதியினருக்குரிய விளையாட்டு உபகரணங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இங்கு நடந்த மருத்துவ சிகிச்சை முகாமில் நூற்றுக்கணக்கானவர்களுக்கு பல்வேறு சிகிச்சை வழங்கியதுடன் மூக்குக்கண்ணாடிகளையும் வழங்கியுள்ளனர்.

நேற்றைய தினம் மாங்குளம் மகா வித்தியாலயத்திற்கு மாங்குளம் மாதர் அபிவிருத்தி சங்கத்தினரை சந்தித்து 400 தென்னங்கன்றுகளையும் 3 பெறுமதி மிக்க அவுஸ்திரேலிய தையல் இயந்திரங்களையும் 400 இற்கு மேற்பட்ட மக்களுக்கு வைத்திய சிகிச்சை வழங்கியதுடன் நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளையும் வழங்கியுள்ளனர்.

இன்றைய தினம் வவுனியாவில் உள்ள பொது அமைப்புக்களை சந்தித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவிகளையும் அத்தோடு சில அத்தியாவசிய பொருட்களையும் வழங்கவுள்ளனர்.

நாளை செவ்வாய்க்கிழமை கண்டி நாவலப்பிட்டி நகருக்குச் சென்று மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவசிகிச்சையுடன் ஏனைய உதவிகளையும் வழங்கவுள்ளதாக குழுவின் தலைவி திருமதி காயத்திரி மதன் மேலும் தெரிவித்துள்ளார்.

இவர்களது உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்போதைய அனர்த்த சூழ்நிலையில் பயன்மிக்கதாக காணப்பட்டதாக மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (அ-3-15)

# ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

மணியம்தோட்டம், உதயபுரம், வசந்தபுரம் மறைக்கல்விமாணவர்களின் ஒளி விழா நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கத்தர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக புனித சூசையப்பர் சிறிய குருமட அதிபர் அருட்தந்தை அன்புராசா, சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அ.இரவீந்திரதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

# சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டன

சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் எடுத்து வரப்பட்ட சிகரெட்டுக்களுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பலாங்கொடையில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்த சட்டவிரோத சிகரெட்டுக்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர் அம்பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ-2)

# புலிகள் மீள இணைவதாக அரசாங்கம் போலிப்பிரசாரம்

தமிழீழ விடுதலைப் புலிகள் நாட்டில் மீள ஒருங்கிணைவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

புலிகள் மீள ஒருங்கிணைவதாக அரசாங்கம் செய்து வரும் பிரசாரம் அடிப்படையற்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். இன சமூகங்கங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறான போலிப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கங்கத்தின் குற்றச்சாட்டுக்கள் முற்று முழுதாக பொய்யானவை என அவர் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் எந்த மாணவருக்கும் புலிகளுடன் தொடர்பு கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகளுடன் தொடர்புகளைப் பேணுவதாகவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் சிங்கள மக்கள் நம்ப வேண்டுமென அரசாங்கம் எதிர்பார்க்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசாங்கமே இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# 57 ஆவது ஒழுங்கை தமிழ்ச் சங்க ஒழுங்கையாக மாற்றம் பெறும்

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள 57 ஆவது ஒழுங்கையை தமிழ்ச் சங்க ஒழுங்கை என்று பெயரிடுவதற்கான அனுமதி கிடைக்கப்பெறவுள்ளதாகவும் மாநகரசபை இதற்கான அனுமதியை விரைவில் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பெயர் மாற்ற நிகழ்வு கடந்த நவம்பர் 25 ஆம் திகதி இடம்பெறவிருந்தபோதும் அது ஆட்சேபனை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

எனினும் கிடைத்த முறைப்பாடுகள் ஆதாரமற்றவை என்ற அடிப்படையில் விரைவில் இந்த ஒழுங்கை தமிழ்ச்சங்க ஒழுங்கை என்றும் பெயரிடப்படவுள்ளது.

வெள்ளவத்தை 57 ஆவது ஒழுங்கையை தமிழ்ச்சங்க ஒழுங்கை என்று பெயரிடவேண்டும் என்ற யோசனையை கலாநிதி வி.கங்கை வேணியின் முன்மொழிந்திருந்தார். (அ-2)

# சதொச நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல்

## நுகர்வோர் அதிகார சபை

(கொழும்பு)

இலங்கை சதொச நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

பாவனைக்கு உதவாத பெரிய வெங்காயத்தை விற்பனைக்காக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டமையின் காரணமாகவே குறித்த நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அவ் அதிகாரி சபை குறிப்பிட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபை மேற்கொண்ட தேடுதலின் போது பாவனைக்கு உதவாத 43 ஆயிரம் கிலோ கிராமிற்கும் அதிகளவான சதொச பெரிய வெங்காயம் களஞ்சியசாலைகள் மூன்றில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு, குருநாகல் மற்றும் வெலிசற சதொச களஞ்சியசாலைகளில் இருந்து இத்தொகை வெங்காயங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் சதொச அதிகாரிகள் அனைவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ-2)

# கிராமசேவகர் அலுவலகம் வள்ளுவர்புரத்தில் இல்லை

## சேவையை பெற மக்கள் அலைவு

(றெட்பானா)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள மாணிக்கபுரம் கிராமத்திற்கு கிராம சேவகர் அலுவலகம் இன்றி காணப்படுகிறது.

இக்கிராம அலுவலகம் வள்ளுவர்புரம் கிராம சேவகர் மண்டபத்தில் கடந்த மூன்று வருடங்களாக தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் இயங்கி வந்த இக்கிரராம அலுவலக காணி அரசியல் தலையீடு காரணமாக தனிநபர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 30 வருடங்களாக இக்கிராம சேவகர் பிரிவில் பொதுக்காணிகள், விளையாட்டு மைதானம், பொது நோக்கு மண்டபங்கள், நிலையான கட்டடங்கள் என எவையும் காணப்படவில்லை.

இக்கிராமத்தை நெறிப்படுத்தும் கிராம அபிவிருத்தி சங்கம், கிராம சேவகர் போன்றோரின் அசமந்த போக்கினாலே தொடர்ந்தும் இக்கிராமம் இவ்வாறான குறைபாடுகளை சுமக்கும் கிராமமாக காணப்படுகிறது.

• எனவே, இதில் கூடிய கவனம் எடுத்து இக்குறைபாடுகளை தீர்ப்பதற்கு அரச அதிகாரிகள் முன்வர வேண்டுமென பாதிக்கப்பட்ட கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-260)






ஊர்காவற்றுறை பிரதேசசபையின் உள்ளுராட்சி வார நிறைவு விழாவும் தேசிய வாசிப்பு மாத சிறப்பு நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதேச சபையின் உபதவிசாளர் ம.பெ.பெ.அல்பேட் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் நிற்பதையும் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருட்சம் ஆகும் முன் வித்தாகி போன கரவை மண் பெற்றெடுத்த முத்து



ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் சொல்லும்படியாக கரவெட்டி மண்ணிற்கு தொடர்புண்டு எனலாம். ஏனெனில் தமிழ் இலக்கிய உலகிலே பல்வேறுபட்ட அறிஞர்கள் உருவாக்கிய, உருவாக்கிக் கொண்டு இருக்கின்ற ஒரு மண் கரவை மண் எனலாம்.

இந்த மண்ணில் ஊற்று எடுத்த தமிழ் நதிகளில் ஆசிரியர் பொ. கமலரூபன் குறிப்பிடத்தக்கவர். நதியாக ஊற்று எடுத்த வேளையிலும் பிரவாகித்து ஓடமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு இன்றோடு 12 ஆண்டுகள் கடந்துவிட்டன. எனினும் இவரது இலக்கிய முயற்சிகளும் படைப்புகளும் என்றும் தமிழ் உலகில் தலைநிமிர்ந்து வாழும் என்பதில் ஐயம் இல்லை.

பல்துறைப்பட்ட இலக்கியவாதியாக மிளிர்ந்தவர்தான் ஆசிரியர் பொ.கமலரூபன். இவர் தனது முப்பதாவது வயது கடந்த மறுநாள் இவ் உலக வாழ்வை விட்டு சென்றார். ஆனால் இவரது இலக்கிய நோக்கு பிற்காலத்தில் நிச்சயமாக பெரிய தமிழ் அறிஞராக

## மறைந்தார் மாண்பு

வருவார் என்பதற்கு கட்டியம் கூறி நின்றது. கரவெட்டி மண்ணில் பிறந்து பல்கலைக்கழக மரபின் ஊடாக மிளிர்ந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர் செ. யோகராஜா போன்றவர்களின் வரிசையில் தடம் பதிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட ஒருவர்தான் ஆசிரியர் பொ.கமலரூபன்.

இவரது இலக்கியப் பரீட்சயம் என்பது தனித்து பழைய தமிழ் இலக்கியத்துடனோ அல்லது நவீன தமிழ் இலக்கியத்துடனோ நின்று விடவில்லை. இரு துறையிலும் இவரது ஆழமான பார்வைபட்டிருந்தது. வளர்ந்து வரும் இளம் படைப்பாளிகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினார்.

ஆசிரியரின் **ஈழத்துத் தமிழ் கவிதை வரலாறு ஓர் அறிமுகம்** என்ற படைப்பு ஆசிரியர் காலமாகி ஒரு வருட காலத்தின் பின் கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினர் வெளியீடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

இவரது மற்றும் ஒரு படைப்பாக காணப்படுவது **எண்பதுக்குப் பின்னர் ஈழத்துப் புதுக் கவிதை** என்பதாகும். இது அவரது தமிழ் சிறப்பு பட்டத்தேர்வின் ஆய்வுக் கட்டுரையாகும்.

இந்தியாவில் தமிழகத்தில் இருந்து வெளிவரும் **சதங்கை** என்கின்ற இலக்கிய சஞ்சிகையையும் இவரது படைப்புகள் அணி சேர்த்தன. இலக்கிய படைப்பாளியாக வெளிப்பட்ட அதேவேளை சிறந்த ஆசிரியராகவும் காணப்பட்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளராகவும் கடமையாற்றி வந்தார்.

ஒரு குரு எப்படி இருக்க வேண்டும் என்று ஒரு இலக்கணம் வகுக்கப்படுமாக இருந்தால் அதன் இலக்கணமாக திகழ்வது ஆசிரியர் பொ.கமலரூபனே.

விமர்சன நிலையிலும் மற்றவர்களின் மனம் நோகாமல் உண்மை நிலை வெளிப்படுத்துவதில் வல்லவராக காணப்பட்டார்.

தனது தாயாரின் நினைவாக பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய **காதலியாற்றுப்படையினை** வெளியிட்டதன் ஊடாக தமிழ் மீது இவர் கொண்ட பேரவா வெளிப்படுகின்றது.

ஈழத்து பத்திரிகைகளிலும் பல்வேறு ஆக்கங்களை படைத்தவர். குறிப்பாக குற்றவாளிக் கூண்டில் பாரதியை நாம் நிறுத்தியது நியாயம் தானா? என்ற ஆக்கத்தின் ஊடாக பாரதிக்கு ஏற்பட்ட மாசினை துடைத்து நின்றார் .

உண்மையில் ஆளுமை மிக்க தமிழன் தலைமகனாக மகுடம் சூடுவர் என காத்திருந்த வேளையில் அகாலமாகினாலும் என்றும் ஆசிரியர் அவர்கள் தனது மாணவர்களினாலும் தனது படைப்புக்களினாலும் என்றும் தமிழ் உலகில் வாழ்வார் என்பது திண்ணம்.

**தி.கார்த்திகேயன்.**

# சொத்து விபரங்கள் குறித்து விசாரணை

### தேர்தல் ஆணையாளர்

அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களது சொத்து விபரங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது.

சொத்து விபரங்களை வெளியிடாத அரசியல் கட்சிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கடந்த 12 ஆண்டுகளாக தனியார் அல்லது அரச நிறுவனங்களின் கடமை மாற்றாது அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்கள் பாரியளவில் சொத்துக்களை குவித்துள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்களின் உள்நாட்டு வெளிநாட்டு சொத்துக்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்படவுள்ளன. சில அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்களிடம் பாரிய வீடுகள், சொகுசு வாகனங்கள் மற்றும் வெளிநாட்டு வங்கிக் கணக்குகள் காணப்படுகின்றன.

சில அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்கள் பல தடவைகள் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டுள்ளனர். 2002ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஆறு நாடுகள் குறித்த நிறுவனங்களுக்கு 600 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளன.

ஆண்டறிக்கை மற்றும் கட்சி உத்தியோகத்தர்களின் சொத்து விபரங்களை வெளியிடாத கட்சிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். சொத்து விபரங்களை வெளியிடாமை உள்ளிட்ட பல்வேறு காரணிகள் குறித்து ஆராய்வதற்காக சகல அரசியல் கட்சிகளுடன் விசேட சந்திப்பொன்று நடத்தப்படவுள்ளது.

ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் தலைமைச் செயலகத்தில் இந்தக் கூட்டம் நடத்தப்படவுள்ளது. (அ-2)

# பல்கலை நகரத்திட்டத்தை அறிமுகப்படுத்த அரசு தீர்மானம்

பல்கலைக்கழக நகரங்கள் திட்டத்தை இலங்கையிலும் அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய அடுத்த ஆண்டில் ஸ்ரீஜயவர்த்தனபுரம், மொறட்டுவ மற்றும் றுகுணு பல்கலைக்கழகங்கள் சூழவுள்ள பிரதேசங்கள் சகல வசதிகளையும் உள்ளடக்கும் முழுமையான நகரங்களாக மாற்றப்படவுள்ளது.

இவ்விதம் நிர்மாணிக்கப்படும் பல்கலைக்கழக நகரொன்றில் நூலகம், வீட்டுத்திட்டம் ஒன்றும் வர்த்தக நிலையங்களும் அடங்கும். கட்டடத் தொடர்கள், விளையாட்டு மைதானம், நிதி நிறுவனங்கள், சிறுவர் பூங்காக்கள் மற்றும் ஏனைய பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் பல்கலைக்கழக மாணவர்களுக்கு போன்றே பொதுமக்களுக்கும் கூட அந்த வசதிகளையும் பெற்று அனுபவிப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும். (அ-2)

# முசலி பிரதேச மக்களுக்கான உணவு கடல் வழியாக வந்து சேர்ந்தது

மன்னார் முசலி பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலருணவுகள் 35 படகுகளில் கொண்டு வரப்பட்டன.

மன்னார் சவுத்பார் மற்றும் வங்காலை கடற்பரப்பினூடாக இவ்வுலருணவுகள் படகுகளில் முசலி பிரதேசத்துக்கு நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்டுள்ளதாக அப்பிரதேச சபைத் தலைவர் எஹியான் தெரிவித்துள்ளார்.

முசலி பிரதேசத்திற்கான அனைத்துப் பாதைகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் 25ஆயிரம் கிலோ உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ள குஞ்சுக்குளம் மாதா கிராமம் மக்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை படகுகள் மூலம் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாக பிரதேச சபைத் தலைவர் எஹியான் மேலும் கூறினார்.

கடந்த சில தினங்களாக பெய்த கடும் மழையைத் தொடர்ந்து குளங்கள் உடைப்பெடுத்ததைத் தொடர்ந்தும் மன்னாரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு அமைச்சர் ரிசாட் பதியூதீன் அதிகாரிகளுக்குப் பணித்தார். (அ-2)

### வடக்கில் பொழிந்த கடும் மழையை அடுத்து


# வீதிப் போக்குவரத்துக்கு ஓய்வு; படகுப் போக்குவரத்து ஆரம்பம்


மன்னார்-சங்குப்பிட்டி பிரதான வீதி நாயாத்து வழி பகுதியில் ஆற்று நீர் பெருக்கெடுத்துள்ளமையினால் குறித்த வீதியினூடாக போக்குவரத்துக்கள் பாதிப்படைந்த நிலையில் அங்கு கடற்படையினர் விசேட படகுச் சேவையை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

நாயாத்து வீதியில் வெள்ளநீர் பெருக்கெடுத்துள்ளமையினால் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விடத்தல் தீவு, சன்னார், ஈச்சலவக்கை, பெரிய மடு, கோவில் குளம், சவேரியார் புரம், வேண்பிட்டி, வெள்ளாங்குளம் உள்ளிட்ட பல கிராமங்களுக்கான போக்குவரத்துக்கள் பாதிப்படைந்துள்ளது.

இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவத்தின் 541 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் கடற்படையினர் படகுகள் மூலம் சுமார் 200 மீற்றர் தூரம் வரை மக்களை ஏற்றி இறக்கும் சேவையில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் குறித்த பகுதியில் பொலிஸார், கடற்படையினர் மற்றும் இராணுவத்தினர் மக்களுக்கான போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (அ-2)





வடமாகாண கல்வி வலயங்களுக்கிடையிலான இடமாற்றம் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் வடமாகாண ஆளுநர் பணிமனையில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட வடமாகாண பிரதம செயலாளர் ஆர். விஜயலட்சுமி, வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரைப் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# இராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 02.12.2012–20.06.2014

ஜோதிடக் கலைமணி, சிவல்புரி சிங்காரம்



## மீனம்



**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**40/100**

**அஷ்டமத்தில் வரும் இராகு! ஆலயம் சென்றால் பலனுண்டு!**

**எவரிடமும் எளிதாக நெருங்கிப் பழகும் இயல்பைப் பெற்ற மீன இராசி நேயர்களே!**

நவக்கிரகங்களில் சுப கிரகம் என்று போற்றப்படும் குரு உங்கள் இராசிநாதனாக விளங்குகிறார். எனவே, சமூகத்தில் உங்கள் மதிப்பும், மரியாதையும் உயரும். நீங்கள் சொல்லும் சொற்கள் வெல்லும் சொற்களாக மாறும். பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்களையும் வசப்படுத்திக் கொள்வதில் வல்லவர்களாக விளங்குவீர்கள்.

முயற்சி ஒன்றையே முழு ஆயுதமாகக் கொண்டு முன்னுக்கு வருபவர்கள் நீங்கள்தான். நாகரீகப் பொருட்களின் மீது மோகம் அதிகம் கொண்டவர்கள். நண்பர்கள் கூட்டத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

எந்தவொரு செயலுக்கும் காரணம் உண்டு என்று சொல்லும் நீங்கள், அரசியல்வாதிகளின் நட்பை அதிகம் பெற்றிருப்பீர்கள். வாகனங்களை அடிக்கடி மாற்றம் செய்வீர்கள். உறுதியான மனமே உங்கள் மூலதனமாக இருப்பதால் இறுதியாக நீங்கள் எடுக்கும் முடிவே எல்லோரும் ஒத்துக் கொள்வதாக இருக்கும்.

இராசியில் கடைசியாக இருந்தாலும் பண வளர்ச்சியில் முதல் இராசியாகக் காட்சியளிப்பீர்கள். ஆனால், பணபலத்தால் சாதிக்க முடியாததை பக்கபலமாக இருக்கும் நண்பர்களால் சாதிப்பீர்கள். இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த இராகு- கேது பெயர்ச்சி என்னென்ன மாற்றங்களையும் எப்படிப்பட்ட ஏற்றங்களையும் வழங்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**அலைச்சலால் ஆதாயம் தரும் அஷ்டமத்து இராகு! ஆலய வழிபாட்டால் பலன் கொடுக்கும் இரண்டாமிடத்து கேது!**

இதுவரை விருச்சிக இராசியில் சஞ்சரித்து வந்த இராகுவும், இடப இராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தனது வான்வெளிப் பயணத்தில் பின்னோக்கிச் சென்று பெரிய மாற்றங்களைக் கொடுக்கப் போகிறார்கள். அஷ்டமத்தில் இராகு அடியெடுத்து வைப்பது அவ்வளவு நல்லதல்ல என்பார்கள் அதேநேரத்தில் அஷ்டமத்தில் சனியுமல்லவா சஞ்சரிக்கிறது.

அதுவும் சாதாரண சனியல்ல. உச்சம் பெற்ற சனி என்பதால் விடிந்தால் விரயம் காத்திருக்கிறது என்று சொல்வீர்கள். வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் திணறும் சூழ்நிலை சிலருக்கு உருவாகும்.

ஆனாலும், ஒருசில காரியங்கள் ஒருமுறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலை உருவாகலாம். நினைத்த நேரத்தில் நினைத்தபடி செயற்பட முடியவில்லையே என்று கவலைப் படுவீர்கள். உடன்பிறப்புகளின் வழியிலும் உற்றார், உறவினர்களின் வழியிலும் ஒரு சாரார் பாசமாக இருப்பர்.

எதைச் செய்தாலும் இறை வழிபாட்டை மேற்கொண்டு, அதன்பிறகு காரியத்தை தொடங்கினால்தான் வெற்றி வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள இயலும். சம்பளம் போதுமானதாக இல்லையே என்று ஒரு சாரார் கவலைப்படுவர். சம்சாரம் ஒத்துவரவில்லையே என்று ஒரு சாரார் கவலைப்படுவர். குழந்தைகளின் குணம் சரியில்லாமல் போகிறதே என்று சிலர் கவலைப்படுவர். ஆரோக்கிய பாதிப்பாலும் கவலைப்பட நேரிடலாம்.

கொடுக்கல்- வாங்கல்களில் சிக்கல் வந்துவிட்டதே என்று ஒருசிலர் கவலைப்படுவர். கூட்டாளிகள் விலகிவிட்டார்களே என்று ஒருசிலர் வருத்தப்படுவர். இப்படி ஏதேனும் ஒரு வருத்தத்தை அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் இராகு வரவழைத்துக் கொடுக்கலாம். இருந்தாலும், நீங்கள் கவலைப் படவேண்டியதில்லை. விபரீத இராஜ யோகம் செயற்படுத்தும் சனியோடு அது இணைந்திருப்பதால் திட்டமிடாது செய்கின்ற காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

திடீர், திடீரென தனலாபம் வ்ந்து சேரும். தெய்வப் பற்று மிக்கவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன்மூலம் தீங்குகள் விலகிச் செல்லும். தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் தக்க துணையாக வைத்துக் கொள்ளுங்கள். சாதுர்யமான பேச்சால் சண்டை சச்சரவை தீர்த்துக் கொள்ளுங்கள். அன்பை விதையுங்கள். ஆனந்த பயிரை அறுவடை செய்யுங்கள்.

பண்புமிக்கவர்கள் என்று போற்றப் படும் நீங்கள், பகல், இரவாக பாடு பட்டதற்கேற்ற பலன் கிடைக்காத நேரமாக இது இருந்தாலும், உழைப்பை மூலதனமாக்கி உயர்வை காணுங்கள். சுயஜாதகத்தில் திசாபுத்தி பலமிழந்திருந்தவர்கள் வீடுமாற்றம், நாடு மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றம், இலாகா மாற்றம் என்று ஏதேனும் ஒரு மாற்றத்தைக் காண நேரிடும்.

எனவே, வரும் மாற்றம் நல்ல மாற்றமாக வரவும், வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ளவும் உங்கள் சுய ஜாதகத்தை ஒருமுறை அலசி ஆராய்ந்து பாருங்கள். அதில் இராகு, கேதுக்கள் இருக்குமிடம், பார்க்கும் கிரகம், பாதசார பலமறிந்து எந்த ஸ்தலத்திற்குச் சென்று பரிகாரங்கள் செய்தால் உடனடியாக பலன் கிடைக்கும் என்பதை அறிந்து, அந்த ஸ்தலத்திற்குச் சென்று வழிபட்டு வந்தால் உங்கள் சிந்தனைகள் அனைத்தும் வெற்றி பெறும். சிகரத்தை தொடும் அளவிற்கு வாழ்க்கைத் தரம் உயரும்.

**என்ன செய்யும் இந்த இரண்டாமிடத்து கேது!**

இதுவரை மூன்றாமிடத்தில் சஞ்சரித்து வந்த கேது இப்பொழுது 2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். வாக்கு, தனம், குடும்பம் என்று வர்ணிக்கப்படும் 2 ஆம் இடத்தில கேது சஞ்சரிக்கும் போது கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலுமா என்பது சந்தேகம்தான்.

எனவே, யாருக்கும் வாக்குக் கொடுக்கும் முன் ஒருகணம் யோசித்துக் கொடுப்பது நல்லது. குடும்பத்திலும் முன்கோபத்தைத் தவிர்த்து முதியவர்கள் முதல் இளையவர்கள் வரை அன்பு செலுத்துவதன் மூலமே ஆதாயம் காண இயலும். சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பதே நல்லது. கணவன், மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமே அன்னியோன்ய உறவு அதிகரிக்கும்.

வாங்கல்- கொடுக்கல்களிலும் சில சமயங்களில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். பிறருக்கு பொறுப்பு சொல்வதால் பிரச்சினைகள் உருவாகலாம்.

பெருந்தொகை வாங்கும்போதும் கொடுக்கும்போதும் கூடுதல் கவனத்துடன் செயற்படுவதே நல்லது. நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் உங்களிடமே திரும்பி வரலாம். எனவே, மனக்குழப்பம் கூடும்.

வரவைவிட செலவு இருமடங்காகும். இந்தநேரத்தில் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதே நல்லது. வீடு கட்டும் பணியை தொடரலாம். கட்டிய வீட்டை பழுது பார்க்கும் அமைப்பு சிலருக்கு கிடைக்கும்.

வாகனப் பழுதுச் செலவுகள் அதிகரிக்கும். எனவே, பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டு புதிய வாகனங்களை வாங்குவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்க அனுசரிக்கும் குணம்தான் தேவை. வேலைப்பளு கூடும். சொந்த வேலை எதையும் பார்க்க முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள்.

பெண் குழந்தைகளின் பூப்புனித நீராட்டுவிழா, பெற்றெடுத்த பிள்ளைகளின் திருமண வைபவம், பெற்றோர்களின் மணிவிழா நிகழ்ச்சி என்று ஏதாவது ஒரு சுபகாரியம் வீட்டில் நடக்க வாய்ப்பு உருவாகும். அங்ஙனம் சுபவிரயம் செய்ய முற்பட்டால் விண்விரயங்களில் இருந்து தப்பித்துக் கொள்ள இயலும்.

வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கிச் சேர்க்க முற்படலாம். தங்கம், வெள்ளி நூதனக்கருவிகள் வாங்கி வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இயலும். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். வருமானம் எவ்வளவு தான் வந்தாலும், செலவு கூடும். யாருடன் பேசினாலும் சுருக்கென்று பேசாமல் சுகமாக பேசி காரியங்களைச் சாதித்துக்கொள்வதே நல்லது.

**பாதசார அடிப்படையில் பலன்தரும் இராகு!**

துலாம் இராசியில் சஞ்சரிக்கும் இராகு முதலில் குருகாலில் சஞ்சரிக்கப் போகிறார். இக்காலம் உங்களுக்கு இனிய காலமாகவே இருக்கும். எடுத்த செயல்களில் வெற்றி காண்பீர்கள். தொழில், உத்தியோகத்தில் தொல்லை தந்தவர்கள் விலகுவர். எதிர்பார்த்த மாற்றம் இனிய மாற்றமாக அமையும்.

இராகு தன் சுயசாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது எதிலும் மிகுந்த விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது. ஆரோக்கிய பாதிப்புகளும் ஏற்பட்டு அகலும். மாற்று மருத்துவமும் இக்காலத்தில் குணமடைய வைக்கும். வீட்டுப்பிரச்சினை முதல் நாட்டுப்பிரச்சினைவரை அலை மோதும் இந்தநேரத்தில் பொதுவாழ்வில் இருப்பவர்கள் வீண்பழிகள் வராமல் பார்த்துக்கொள்வது நல்லது. பயண்ங்களை மாற்றி அமைப்பீர்கள் திட்டமிட்ட காரியங்கள் திசை மாறிப் போகலாம்.

இராகு, செவ்வாயின் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது செல்வநிலை உயரும். செல்வாக்கு மேலோங்கும். நல்லவர்களின் தொடர்பால் நலம் காண்பீர்கள். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள்தோன்றும்.

**பாதசார அடிப்படையில் கேது தரும் பலன்கள்!**

கேது மேட இராசியில் அடியெடுத்து வைக்கும் பொழுது முதலில் சூரியன் சாரத்தில் சஞ்சரிக்கப்போகிறார். இக்காலத்தில் எதிரிகளின் பலம் கூடும். எனவே, வீண்விவகாரங்களைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்கள் வி.ஆர்.எஸ். பெற்றுக்கொண்டு சுயதொழில் தொடங்க முன்வருவர். அரசுவழிக் கடன் உதவிக்காக காத்திருப்பவர்களுக்கு அது கைகூடும்.

கேது, சுக்கிரன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது பயணங்கள் அதிகரிக்கும். அலைச்சலுக்கு ஏற்ப ஆதாயம் கிடைக்காது. இனம்புரியாத கவலை மேலோங்கும். குடும்பம்ப்பிரச்சினைகளை ஒவ்வொன்றாகத் தீர்த்துவைக்க முன்வருவீர்கள். இடம், பூமி விற்பனையால் இலாபம் உண்டு.

கேது சுயசாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது, புகழ் கூடும். பொருளாதாரநிலை மேலேங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். கூட்டு முயற்சிகள் தனியானதாக மாறும். சுதந்திரமாக செய்படத் தொடங்குவீர்கள். பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

8 ஆம் இடத்து இராகுவால் இனிய பலன்களைக் காணவும் 2 ஆம் இடத்துக் கேதுவால் இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறவும் அருகில் இருக்கும் சிவாலயத்தற்குச் சென்று வியாழக்கிழமை தோறும் தென்முகக் கடவுளை வழிபட்டு வாருங்கள். சுயஜாதகத்தில் இராகு, கேதுக்களின் சாரபலம் அறிந்து பரிகாரங்களை அதற்குரிய ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து செய்வது நல்லது.

(முற்றும்)

# எடுத்த காரியங்களில் வெற்றிகிட்டும் இனியகாலம் அமையப் போகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

326

## அது... இது எது? எது?

அஞ்சலிக்கு ஐந்து வயது. இரவு படுக்கையில் படுத்திருந்த அப்பாவின் மீதேறி அமர்ந்தபடிநான் ஒன்று கேட்பேன். வாங்கித்திருவீங்களா அப்பா? என ஆசையாகக் கேட்டாள். அவள் அப்படி என்ன கேட்பாள் என்பதைத் தெரிந்துகொள்ள அவளுடைய அம்மா, அண்ணனுக்கும் ஆசையாக இருந்தது.

நிச்சயமாக உனக்கு வாங்கித் தருவேன் என்றார் அப்பா. அதன்பின்பு அவள் சொன்னது தான் எல்லோரையும் பெரும் சுவாரஸ்யத்துக்கும் குழப்பத்துக்கும் ஆளாக்கிவிட் டது. அஞ்சலியின் அப்பா, அம்மா, அண்ணன் மாக்ஸ் மூவரும் பெரும் ஆராய்ச்சியில் இறங்கவேண்டியதாகி விட்டது. எனக்கு மிகவும் பிடித்தமானதாக இருந்தாலும் அதன் பெயர் தெரியாது என்றாள் அஞ்சலி. அப்படியானால் அதை எப்படி வாங்கித் தரமுடியும்? அம்மாவுக்கு எடுத்த எடுப்பிலேயே ஆயாசமாகி விட் டது.

அஞ்சலிக்கு அதை எப்படியாவது விளக்கிச்சொல்ல வேண்டும் என்று கண்கள் அலை பாய்ந்தன. பரவாயில்லை குட்டி... நீ யோசித்து நாளைக்குச் சொல். நாளைக்கே வாங்கித்தருகிறேன் என்று நம்பிக்கையூட்டும் விதமாகச் சொன்னார் அப்பா. அவளுக்கு நம்பிக்கை தேவையாக இருக்கவில்லை. அந்தப்பொருள்தான் தேவையாக இருந்தது.

விளக்கை அணைத்துவிட்டு கண்ணயர ஆரம்பித்தநேரத்தில் அஞ்சலி அப்பா கண்டுபிடித்து விட்டேன். விளக்கைப்போடுங்கள் என உற்சாகமாகக் குரல் கொடுத்தாள். இவ்வளவு நேரமாக அவள் தூங்காமல் யோசனையில் இருந்திருக்கிறாள்.

விளக்கு இல்லாமல் சொல்ல முடியாதா? அப்பா கேட்டார். இல்லையப்பா... விளக்கைப் போட்டால்தான் அதை உங்களுக்குக் காட்டமுடியும். ஓ நம் வீட்டில் ஏற்கனவே இருக்கும் பொருள் தானா? என்றார் அப்பா.

விளக்கைப்போட்டுவிட்டு அவளைப்பார்த்தார். அவள் படுத்திருந்த நிலையிலேயே தன் சிறிய ஆட்காட்டி விரலை உயர்த்தி விட்டத்தைக் காட்டினாள்.

அங்கே என்ன இருக்கு? மாக்ஸ் யோசனையோடு கேட்டான். மேலேயிருப்பது உங்களுக்குத் தெரியவில்லையா? அவள் உறுதியாகச் சொல்வதைப் பார்த்து இன்னும் கூர்ந்து பார்த்தனர். அப்பா கட்டிலின் மீது ஏறி நின்று உற்றுப்பார்த்தார்.

அப்பா நான் சொன்னது மேலே சுழலும் விசிறியைத்தான் என்றாள். உனக்கு எதற்கு மின்விசிறி? மாக்ஸால் யூகிக்கவே முடியவில்லை. அவள் இதே மாதிரியான சிறிய பொம்மை மின்விசிறியைக் கேட்கிறாள் என்றார் அம்மா. அப்படியா மகளின் தலையை வருடியபடி அப்பா கேட்டார்.

அவள் இல்லை என்பதாக மறுத்துவிட்டு நான் கேட்பது இந்த மின்விசிறியோ பொம்மை மின் விசிறியோ இல்லை. அது இது போல இருக்கும். மின்விசிறிபோல இருக்கும் வேறு ஒரு பொருளை மூவரும் கற்பனை செய்து பார்த்தனர். எதுவுமே நினைவுக்கு வராத நிலையில் அப்பா அது சுழலக் கூடியதா? என்று கேட்டார். சற்றே யோசித்துவிட்டு ம்ம்ம்... சுழற்றினால் சுழலும் என்றாள்.

பம்பரம்தானே? உற்சாகத்துடன்



குரல் கொடுத்தான் மாக்ஸ். இல்லை. அது பம்பரம்போல இருக்காது கடற்கரையில் காற்றடித்தால் சுழலுமே அந்தக் காற்றாடியா? அண்ணனின் கேள்விகள் அவளுக்கு அலுப்பாக இருந்தன. அதெல்லாம் இல்லவே இல்லை. அப்படியும் மாக்ஸ் விடவில்லை. தன் புத்தகத்தில் இருந்த மின்விசிறியைக் காண்பித்து இதைப்போல இருக்குமா? என்றான்.

அஞ்சலியின் எரிச்சல் எல்லை மீறியது... நான் சொல்வது இந்த மாதிரி இருக்காது. அந்த மாதிரி இருக்கும் என்றபடி சுழன்று கொண்டு இருந்த மின்விசிறியை மீண்டும் காட்டினாள். அவளுடைய குட்டிக்கண்கள் கோபத்தால் சிவந்தன.

இரண்டு மின்விசிறிகளுக்கும் என்ன வித்தியாசம் என்று எல்லோருமே தீவிரமாக ஆராய்ந்தனர். இது வேறு நிறத்திலும் அது வேறு நிறத்திலும் இருப்பது உங்கள் யாருக்குமே தெரியவில்லையா? என்றாள். அவர்கள் விசிறி கோப்பிக் கொட்டை நிற விசிறி. மாக்ஸ் காண்பித்தது வெள்ளை விசிறி. நீ சொல்லும் பொருள் கோப்பிக் கொட்டை நிறத்தில் இருக்குமா? தலையை மேலும் கீழுமாக ஆசையாக அசைத்தாள். இவர்களுக்குப் புரியவைத்துவிட்ட திருப்தி அவளுடைய முகத்தில். ஆனாலும் அஞ்சலி கேட்டதைக் கண்டுபிடிக்க முடியாமலேயே தூங்கினார்கள்.

இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் இது குறித்துப் பேச்சு ஆரம்பித்தது. நான் சொன்னது சுவையாக இருக்கும் என்றாள். நீ சொன்னது சாப்பிடக்கூடியதா? இதை ஏன் முதலிலேயே சொல்லவில்லை? அப்பா பாதி விடயம் தெளிவாகி விட்டது போலச் சொன்னார்.

ம்... அது மேற்புறத்தில் கோப்பி நிறத்திலும் உள்ளே வேறு நிறத்திலும் இருக்கும் என்றாள் அஞ்சலி. அதை நீ எப்போது, எந்த இடத்தில் சாப்பிட்டாய்? என்ற கோணத்தில் விசாரணை தொடர்ந்தது. போண்டா, பஜ்ஜி, பீட்சா என்று வரிசைப்படுத்திப் பார்த்தும் பயன் இல்லை. அது எதுவுமே இல்லை என்ற அஞ்சலி அதைக்ஹோட்டலில் சாப்பிடவில்லை என்பதை மட்டும் தெளிவுபடுத்தினாள். தோசையா...? சொக்லேட்டா...? போர்ன்விட்டாவா..?

ஆளுக்கொரு கேள்விகேட்டனர். கேள்விகள் திசைமாறிக்போவதைப் பார்த்து அது வட்டமாக இருக்கும். குடிக்கும் பொருள் அல்ல. முடிந்த அளவு அவள் விளக்குவதற்கு முயற்சி செய்தும் தன்னால் கண்டுபிடிக்க முடியவில்லையே என அப்பாவுக்கு வருத்தமாக இருந்தது. கோப்பி நிறத்தில் இருக்கும். சாப்பிடும் பொருள் என்ன என்று அப்பா தன் அலுவலகத் தோழர்களிடமும் மாக்ஸ் அவனுடைய வகுப்பு நண்பர்களிடமும் கேட்டுப் பார்த்தனர். இறுதியாக தான் யூகித்த தின்பண்டம் சரியாக இருக்கும் என்று அதைக்கையோடு வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தார் அப்பா. இதுதானே நீ கேட்டது? பொட்டலத்தைப் பிரித்துக் காண்பித்தார்.

அதில் பிளம் கேக்குகள் இருந்தன. வட்டவடிவமான கோப்பி நிற திட உணவு. உள்ளே வேறு நிறத்திலும் அது இருந்தது. அஞ்சலி அப்பாவையும் கேக்கையும் மாறிமாறிப் பார்த்தாள். இதுவும் எனக்குப் பிடிக்கும்தான். ஆனால் நான் சொன்னது இது இல்லை. அது இதைவிட மெல்லியதாக இருக்கும் என்றாள்.

அஞ்சலி ஆசைப்பட்டதை அவர்களால் தெரிந்து கொள்ள முடியாமலேயே போய்விட்டது. சிலநாட்கள் கழித்து அப்பாவின் அம்மா இருக்கும் கிராமத்துக்குச் சென்றார்கள். வரண்டா ஈஸி சேரில் சாய்ந்துகொண்டு தாத்தா ரேடியோவில் பாட்டுக்கேட்டுக்கொண்டிருந்தார். தாத்தா என்று கத்தியவாறே அஞ்சலியும் மாக்ஸும் ஓடிச்சென்று தாத்தாவைக் கட்டிக்கொண்டார்கள்.

பாட்டி எங்கே? கேட்டாள் அஞ்சலி. நீங்க எல்லாம் ரொம்ப நாளைக்கு அப்புறம் வர்றீங்க இல்லியா? அதான் உங்க பாட்டி பலகாரம் பண்ணிட்டு இருக்கா என்று தாத்தா சொல்லிக் கொண்டு இருக்கும்போதே கையில் கரண்டியுடன் பாட்டி வராண்டாவுக்கே வந்துவிட்டார்.

அந்தக் கரண்டியில் இருந்த பலகாரத்தைப் பார்த்தாள். அடுத்த நொடியே அவள் கண்கள் விரி ந்தன. இதுதான்... இது தான்... எனத்துள்ளிக் குதித்தாள். அட இதுவா என்றாள் அஞ்சலியின் அம்மா.

மாக்ஸிக்கும் அப்பாவுக்கும் ஆச்சர்யம் தாளவில்லை. அது தமிழர் உணவு வகைகளில் ஒன்று. அரிசி மாவும் வெல்லமும் கலந்து செய்யப்படுவது. ரொம்பவே சுவையாக இருக்கும்.

அடடா நாம் கூட இதை மறந்து விட்டோமே என நினைத்தார். அப்பா. எதற்கு அதிரசத்தைப் பார்த்து இத்தனை ஆச்சர்யப்படுகிறார்கள்? என்று புரியாமல் பார்த்தார் பாட்டி.

கொடுத்து வாழ்.... கெடுத்து வாழாதே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொ.ந. மாநாட்டை புறக்கணியுங்கள்

## பிரிட்டன் எம்.பிக்கள் கமரூனிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் அடுத்தவருடம் நடைபெறவுள்ள பொதுநலவாய தலைவர்களின் மாநாட்டை புறக்கணிக்குமாறு பிரித்தானிய பிரதமரை அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கோரியுள்ளார்.

றொக்டேல் சிமோன் டான்ஹுக் என்ற இந்த உறுப்பினர், பிரதமர் கமரூன், இலங்கை மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் மீண்டும் சிந்திக்கவேண்டும் என்று கேட்டுள்ளார்.

பிரித்தானிய சுற்றுலாப் பயணி ஒருவர் இலங்கையின் தென்பகுதியில் இந்தவருட ஆரம்பத்தில் ஆளும் கட்சியின் உள்ளூர் அரசியல்வாதி ஒருவரால் கொலை செய்யப்பட்டார்.

எனினும் இந்தக்கொலை தொடர்பில் காத்திரமான விசாரணைகள் எதுவும் இடம்பெறவில்லை. இந்த நிலையில் நாட்டில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பது கமரூனுக்கு உகந்த செயற்பாடாக இருக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# அமைதியை குலைத்தவர் அரசியலில் ஈடுபட முடியாது

## முல்லேரியா பிரதேச சபை அறிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை கொலன்னாவ முல்லேரியாவில் அரசியல் நடவடிக்கைகளுக்காக அனுமதிக்கப் போவதில்லை என்று கொட்டிகாவத்த மற்றும் முல்லேரியா பிரதேச சபையின் தலைவர் பிரசன்ன சோலங்காராச்சி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொலன்னாவையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலையின் போது காயமடைந்த துமிந்த சில்வா தற்போது சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவர் அடுத்த வாரத்தில் இலங்கைக்கு திரும்பி நீதிமன்றத்தில் ஆஜராகவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் கொலன்னாவையில் அமைதியை குலைத்து விட்டுள்ள துமிந்த சில்வாவை அங்கு அரசியல் செய்ய அனுமதிக்கப் போவதில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# அகதி அந்தஸ்து கோருவதில் இலங்கை 12 ஆவது நாடாம்

## ஐ.நா.உயர்ஸ்தானிகரகம் தெரிவிப்பு

இலங்கை அகதி அந்தஸ்து கோருவதில் 12 ஆவது நாடாக உள்ளது என்று ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் 2011 ஆம் ஆண்டைக்காட்டிலும் இலங்கையர்கள் அகதி நிலைகோரலின் தரப்படுத்தல் குறைந் துள்ளது. 2011 ஆம் ஆண்டில் இல ங்கை அகதி நிலைக் கோரலில் 10 ஆவது நாடாக தரப்படுத்தப்பட்டிருந் தது.

இலங்கை அகதிகள் கடந்த வருடத்தில் மாத்திரம் 44 கைத்தொழில்மய நாடுகளில் அகதி அந்தஸ்தை கோரியிருந்தனர்.

இலங்கையிலிருந்து கடந்த வருடத்தில் 8 ஆயிரத்து 521 அகதி விண்ணப்பங்கள் இந்த நாடுகளுக்கு கிடைத்துள்ளன.

இதன்படி இலங்கையர் உட்பட ஒரு இலட்சத்து 36 ஆயிரத்து 605 அகதிகள் பிரான்ஸ், ஜேர்மனி, பிரித்தானியா, இந்தியா, சுவிட்சர்லாந்து, அவுஸ்திரேலியா, மலேசியா, அமெரிக்கா, இத்தாலி ஆகிய நாடுகளில் அகதி அந்தஸ்தை கோரியுள்ளனர். (அ-2)

# இலங்கையை சீர்குலைக்க சர்வதேச ரீதியில் சதி முயற்சி

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நீதித்துறையை காரணங்காட்டி இலங்கையை சீர்குலைக்க தேசிய மற்றும் சர்வதேச சக்திகள் முயற்சித்து வருவதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வருகின்றார். பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் தொழிற்சங்கவாதிகள் என பல்வேறு தரப்பினரும் பல்வேறு பிரச்சினைகளை தோற்றுவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இருப்பினும் ஜனாதிபதி மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை காரணமாக சதி முயற்சிகளின் வெற்றியளிக்காமல் போய்விட்டன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)




★1492-சிசிலியில் இருந்து ஒரு இலட்சம் யூதர்கள் வெளியேற்றப்பட்டனர்.

★1599- பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி இந்தியாவுக்கான தனது கப்பல் பயணத்தை ஆரம்பித்தது.

★1687- நன்னம்பிக்கை முனையை அடைவதற்காக ஹியூகெனாட் எனப்படும் புரட்டஸ்தாந்தர்களின் முதற் தொகுதியினர் பிரான்சை விட்டுப் புறப்பட்டனர்.

★1695-இங்கிலாந்தில் பலகணி வரி அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து பல அங்காடி உரிமையாளர்கள் தமது அங்காடிகளின் பலகணிகளை செங்கல் கொண்டு மூட ஆரம்பித்தார்கள்.

★1857- விக்டோரியா மகாராணி கனடாவின் தலைநகராக ஒட்டாவாவைத் தேர்ந்தெடுத்தார்.

★1862-அமெரிக்கப் புரட்சிப் போர்: மேற்கு வேர்ஜீனியாவை கூட்டணியில் இணைப்பதற்கான சட்டமூலத்தில் ஆபிரகாம் லிங்கன் கையெழுத்திட்டதில் வேர்ஜீனியா இரண்டாகப் பிரிந்தது.

★1879-வெள்ளொளிர்வு விளக்கு முதற் தடவையாக தோமஸ் எடிசனால் காட்சிப்படுத்தப்பட்டது.

★1881-இலங்கை முழுவதும் கடுமையான நிலநடுக்கம் உணரப்பட்டது.

★1909-மான்ஹட்டன் பாலம் திறக்கப்பட்டது.

★1923-லண்டனின் பிக் பென் மணிக்கூண்டின் மணியொலி மணிக்கொரு தடவை பிபிசியில் ஒலிபரப்பு செய்ய ஆரம்பிக்கப்பட்டது.

★1944- இரண்டாம் உலகப் போர்: ஹங்கேரி ஜேர்மனி மீது போரை அறிவித்தது.

★1946-அமெரிக்க ஜனாதிபதி ஹரி ட்ரூமன் இரண்டாம் உலகப் போரில் ஐக்கிய அமெரிக்காவின் பங்கு முடிவுக்கு வந்ததாக அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

★1847-ஆறுமுக நாவலர் தனது முதலாவது பிரசங்கத்தை வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் ஆரம்பித்தார்.

★1963- மத்திய ஆபிரிக்கக் கூட்டமைப்பு சாம்பியா, மலாவி, ரொடீசியா என மூன்று நாடுகளாகப் பிளவுற்றது.

★1981- கானாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் ஜனாதிபதி ஹில்லா லிமான் பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.

★1984- ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமரானார்.

★1987-ரொபேர்ட் முகாவே சிம்பாப்வேயின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

★1991-சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் அனைத்து நிறுவனங்கள் மற்றும் சோவியத் ஒன்றியம் இந்நாளில் இருந்து அதிகாரபூர்வமாக கலைக்கப்பட்டன.

★1994-பீனிக்ஸ் தீவுகள் மற்றும் லைன் தீவுகளில் நேரமாற்றம் நடைமுறைப்படுத்தப்பட்டதை அடுத்து கிரிபட்டியில் இந்நாள் முற்றாக விலக்கப்பட்டது.

★1999-போரிஸ் யெல்ட்சின் ரஷ்யாவின் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகினார்.

★1999- 1977 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய ஐக்கிய அமெரிக்கா பனாமா கால்வாயின் அதிகாரத்தை பனாமாவிடம் ஒப்படைத்தது.

★1999- இந்திய விமானம் ஒன்றைக் 155 பயணிகளுடன் கடத்திய ஐந்து கடத்தல்காரர்கள் தாம் விடுவிக்கக் கோரிய இரண்டு இஸ்லாமிய மதகுருமார்கள் விடுவிக்கப்பட்டதை அடுத்து விமானத்தைக் கைவிட்டு வெளியேறினர்.

★2004-உலகின் மிக உயரமான வானளாவியான தாய்வானின் 509 மீற்றர் உயர தாய்பே 101 அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது.

★2006-ஐக்கிய அமெரிக்காவிடம் இரண்டாம் உலகப் போரின் போது பெற்ற கடன்களை ஐக்கிய இராச்சியம் முழுவதுமாக கட்டி முடித்தது.

### பிறப்புக்கள்

★1491-ஜாக் கார்ட்டியே, பிரெஞ்சு நாடுகாண் பயணி (இ.1557)

★1880-ஜோர்ஜ் மார்ஷல், நோபல் விருது பெற்ற அமெரிக்கர் (இ.1959)

★1937-அவ்ராம் ஹேர்ஷ்கோ, நோபல் பரிசு பெற்ற இஸ்ரேலியர்

★1955-தாவூத் இப்ராகிம், இந்தியாவில் தேடப்படும் தீவிரவாதி

### இறப்புக்கள்

★1905-அலெக்சாண்டர் பப்போவ், ரஷ்ய இயற்பியலாளர் (பி.1859)

★2001-தொ.மு.சிதம்பர ரகுநாதன், தமிழக எழுத்தாளர் (பி.1923)

#### தொ.மு.சிதம்பர ரகுநாதன்



தொ.மு.சிதம்பர ரகுநாதன் சிறுகதை, நாவல், விமர்சனம், ஆய்வு, மொழிப்பெயர்ப்பு, நாடகம், வாழ்க்கை வரலாறு எனப் பல துறைகளிலும் எழுதியவர். பத்திரிகை ஆசிரியராக இருந்தவர். ரகுநாதனின் எழுத்துக்கள், ஆய்வுகள், விமர்சனங்கள் யாவும் தமிழில் மார்க்சிய சிந்தனைகளை வளர்த்தது.

**வாழ்க்கைக் குறிப்பு**

ரகுநாதன் திருநெல்வேலியில் 1923 ஆம் ஆண்டு ஒக்டோபர் 21 ஆம் திகதி பிறந்தார். இந்திய ஆட்சிப் பணியில் பணியாற்றிய இவரது அண்ணன் பாஸ்கர தொண்டைமான் ஒரு குறிப்பிடத்தக்க எழுத்தாளர். இந்திய சுதந்திர போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக 1942 இல் சிறைக்குச் சென்றார்.

**விருதுகள்**

சாகித்திய அகடமி விருது – 1983 ஆம் ஆண்டு, சோவியத் லேண்ட் நேரு விருது (தாய் மற்றும் லெனின் கவிதாஞ்சலிக்காக) தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தின் தமிழன்னை பரிசு பாரதி விருது – 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்திய வர்த்தக முரண்பாடுகள் ஓர் அரசியல் புயலுக்கு அறிகுறிகளா?

*த சன்டே லீடர் இற்கு ஆர். ஹரிஹரன் எழுதியதிலிருந்து...*

இந்தியா தொடர்பில் இலங்கை தனது புதிய கொள்கைத் தீர்மானங்களை மீளாய்வு செய்யாவிட்டால், இது இலங்கையின் நம்பகத்தன் மையைக் குறிப்பாக இந்தியாவுடனான வர்த்தக சார் உறவுநிலையில் பாதிப்பை ஏற்படுத்தும். இதில் இலங்கையே இழப்பைச் சந்திக்கும் வரும் மாதங்களில் இலங்கை தனது சரிந்துபோயுள்ள பொருளாதாரத்தை மீண்டும் நிலை நிறுத்துவதற்கு இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள வேண்டிய தேவையுள்ளது.



இந்நிலையில் இலங்கையின் புதிய வெளியுறவுக் கொள்கைகள், இந்தியாவின் வர்த்தக சார் நலனைப் பாதிக்கும் விதமாக வரையப் பட்டுள்ளதால், இது நிச்சயமாக இலங்கைக்கு நல்ல வாய்ப்பாக அமையாது. இதற்கப்பால், 2013 ஏப்ரலில் கூடவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான விவாதத்தில் இலங்கையானது இந்தியாவின் அரசியல் ஆதரவை பெற்றுக் கொள்ளவேண்டிய தேவையும் உள்ளது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தி லுள்ள சம்பூரில் 500 மெகாவாற் சக்தி வலுவைக் கொண்ட மின்னாலை ஒன்றை அமைப்பது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில் டிசெம்பர் 2006 இல் இலங்கை மற்றும் இந்திய அரசாங்கமும் இந்தியாவின் நாசனல் தேர்மல் பவர் கோர்ப் நிறுவனம், இலங்கை மின்சாரசபை ஆகியன இணைந்து கைச்சாத்திட்டன. ஆனால், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன.

அதாவது 07.09.2011 வரை: மின்னாலை ஒன்றை அமைப்பதற்கான மிகப் பொருத்தமான இடமாக சம்பூர் தெரிவு செய்யப்பட்டபோதிலும் தொழில்நுட்பம், விலையிடல், 500ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்துதல், மின்னாலைக்கான நிலக்கரி வழங்கலை நிர்வகித்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை.

07.09.2011:

இந்தத் திட்டத்தை இந்தியாவின் என்.ரி.பி.சி மற்றும் இலங்கை மின்சாரசபை ஆகிய இரண்டும் இணைந்து கைச்சாத்திட்ட அதே வேளையில் இதற்கான பணிகளை திருகோணலை மின்சக்தி நிறுவனம் அமுல்படுத்தும் எனவும் உடன்பாடு செய்யப்பட்டது. இவ்விரு பங்காளி நிறுவனங்களும் முதலில் 75 மில்லியன் டொலர்களை வழங்குவதுடன் மீதித் தொகையானது கடன் பெற்றுக் கொள்வதன் மூலம் சம்பூர் அனல் மின்னாலைத் திட்டம் அமுல் படுத்தப்படும் என உடன்படக்கையில் குறிப்பிடப்பட்டது. இத்திட்டமானது செப்ரெம்பர் 2011 இல் ஆரம்பிக்கப்பட்டு ஜூலை 2014 இல் நிறைவுக்குக் கொண்டுவரப்படும் என இலங்கை மின்சாரசபையின் இணையத் தளத்தில் குறிப்பிடப்பட்டபோதிலும், தற்போது இத்திட்டமானது ஒரு ஆண்டுகாலத்தின் பின்னரே நிறைவுபடுத்தப்படும் என கூறப்படுகிறது.


10.05.2012 :

இந்த அனல் மின்னிலையத்தை நிறுவுவது தொடர்பில் உள்ளக தீர்மானம் எடுப்பதற்கு எட்டுமாதங்கள் பிடித்துள்ளது- இதனை நிறுவுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் புதிய சம்பூர் அனல் மின்னிலையத் திட்டமானது இந்தியத் திட்டமல்ல எனவும், இது இலங்கையால் முன்னெடுக்கப்படுவதாகவும் இதற்காக 500 ஏக்கர் நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இலங்கை மின்சக்தி அமைச்சர் சம்பிக்க இரணவக்க நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார்.

21.06.2012: இந்தியா இத்திட்டத்திற்கான ஒப்புதலை வழங்கத் தாமதிப்பதாலேயே இத்திட்டம் இன்னமும் இழுத்தடிக்கப்படுவதாக இந்தியப்பிரதமரிடம் அமைச்சர் ரணவக்க விளக்கம் அளித்திருந்தார். தற்போது இத்திட்டத்தின் தாமதத்திற்கு இந்தியாவே பொறுப்பு என சாட்டப்பட்டுள்ளது.

டிசெம்பர் 2012:

வெப்பவீதத்தைக் குறைக்குமாறும், இதன் மூலம் ஒரு அலகு மின்சார உற்பத்திக்கு குறைந்தளவு நிலக்கரியை பயன்படுத்த முடியும் எனவும், பொறியியலாளர்கள் இந்தியாவைக் கோரியுள்ளதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டி ருந்தது. இதற்கான செலவை இலங்கை மின்சார சபை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதால் என்.ரி.பி.சி. யின்சாத்தியப்பாடுஅறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள, சில வட்டி வீதம் தொடர்பாக கவனத்திற் கொண்டுள்ளதாக ரணவக்க குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பான கலந்துரையாடல்களும் தற்போது மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் தெரிவித்திருந்தார். ,இலங்கை மின்சார சபையும் இந்தியாவின் என்.ரி.பி.சி.யும் இந்த விடயத்தில் நியாயமான தீர்வொன்றை எட்டவேண்டும். இல்லாவிடில் இதுதொடர்பில் இலங்கை மின்சாரசபை பாரிய இழப்பை சந்திக்கவேண்டியேற்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பூரில் இதற்கான நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் இன்னமும் இதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவில்லை.



இவ்வாறான சில அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையில் தொடர்ந்து இழுபறி நிலை காணப்படுகிறது. இதற்கான சிறந்த எடுத்துக் காட்டு, சம்பூர் அனல் மின் நிலையத் திட்டமாகும் என்பதை இதிலிருந்து அறிய முடிகிறது.

இலங்கையில் தொடர்ந்தும் மின்சாரத் தடங்கல் ஏற்படுகின்றபோது இது தொடர்பில் அறிக்கைப்போர் தொடர்ந்து கொண்டிருக்கிறதே தவிர எந்தவொரு பயனுள்ள தீர்வும் எட்டப்படவில்லை. இதற்கான பதிலைக் கூற வேண்டியவரும் அனல் மின்னிலையத் திட்டத்திற்கு பொறுப்பாகவுள்ள சம்பிக்க ரணவக்க கூட இந்தப்பிரச்சினை தொடர்பில் உறுதியான பதிலைக் கூறவில்லை.

இந்தத் திட்டம் தாமதமாவதற்கு இந்தியாவே பொறுப்பு என தொடர்ந்தும் அதிபர் மகிந்த ராஜபக்ச கருதுகிறார். இது தொடர்பாக இலங்கையின் உள்நாட்டில் பொறுப்பாக உள்ளவர்கள் இலங்கை ஜனாதிபதிக்கு பிழையான தகவல்களைத் தெரிவித்துவரும்போது இந்த விடயத்தில் இந்தியா, ராஜபக்சவிற்கு ஆலோசனை வழங்க முடியாதுள்ளது. இந்த விவகாரத்தை அரசியல்மயப்படுத்த வேண்டிய தேவை இந்தியாவுக்கு இல்லை. ஆனால், வர்த்தக ரீதியில் இது இந்தியாவின் முதலீட்டுடன் தொடர்புபட்ட விடயமாகக் காணப்படுகிறது.

இந்திய வரிவழங்குனர்களின் நிதியைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள இத்திட்டத்தின் மீதான தனது முதலீட்டை இந்தியா உறுதிப் படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்திட்டம் திட்டமிட்டதைவிட ஒரு ஆண்டுகாலம் பின்தள்ளப்பட்டது. இதனால் முதலீடு மீதான வட்டியை இந்தியா செலுத்த வேண்டியுள்ளது. இது பயனற்ற ஒன்றாகும். இதனால், இந்த நிதி தொடர்பில் இந்தியா தனது வரிசெலுத்துனர்களுக்கு உரிய பதிலை அளிப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் இந்த முதலீட்டிற்கான செலவை ஆரம்பிக்கப்படாத திட்டத்தின் கீழ் இந்தியா சேர்த்துக்கொள்ள முடியாது. இந்தத் திட்டம் எவ்வளவு காலத்தில் தொடங்கப்படும் என்பதை உறுதிப்படுத்துமிடத்து இதற்கான முதலீட்டை வேறு ஒன்றுக்காக இந்தியா பயன் படுத்திக்கொள்ள முடியும்.

சம்பூர் அனல் மின்னிலையத் திட்டம் போன்று இலங்கையுடனான 'இந்தியாவின் மோட்டார்வாகன ஏற்றுமதி உடன்படிக்கையிலும் இழுபறிநிலை காணப்படுகிறது. அதாவது இந்தியாவின் மோட்டார் வாகன இறக்குமதி சந்தையில் இல ங்கை 80 சதவீத பங்காளியாகக் காணப் படுகிறது.

"கடந்த ஏப்ரலில் இலங்கை, இந்தியாவின் மோட்டார் வாகன இறக்குமதிக்கான தீர்வையை அதிகரித்துள்ளது. இதன் பின்னர் மேலும் இத் தீர்வை, அதிகரிக்கப் பட்டுள்ளது. அதிகம் பயன்படுத்தப்படும் இந்திய வாகனங்களுக்கான இறக்குமதித்தீர்வை, நூறு சதவீதத்திலிருந்து இல ங்கை தற்போது 173 சதவீதம் வரை அதிக ரித்துள்ளது. தற்போது இந்தியா விலிருந்து இலங்கை இறக்குமதி செய்யும் 1000சி.சி கார்களுக்கான இறக்குமதித் தீர்வை 120 சதவீதத்திலிருந்து 200 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது" என இந்தியாவிலிருந்து வெளிவரும் வர்த்தக ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



ஏப்ரலில் இலங்கையில் அதிகரிக்கப்பட்ட இறக்குமதித் தீர்வையால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகன விற்பனையில் மட்டுமல்லாது இது தொடர்பான உற்பத்தியிலும் 50 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என கொழும்பு முகாமைத்துவ இயக்குனர் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 2012 இன் பின்னர் மாருதி 800சிசி இற்கான விலை இலங்கை ரூபா 1.25 மில்லியனில் இருந்து 1.6 மில்லியனாக அதிகரித்துள்ளதாகவும், முகாமைத்துவ இயக்குனர் தெரிவித்துள்ளார். ஆனால், நவம்பர் 2012 இல் மேலும் அதிகரிக்கப்பட்ட இறக்குமதித் தீர்வையால் இதே காரின் விலை தற்போது 1.75 மில்லியன் இலங்கை ரூபாவாக அதிகரித்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதே.

இதுபோன்று இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் முச்சக்கர வண்டிகள் மற்றும் உந்துருளிகளின் விலைகளும் அதிகரித்துள்ளன. இதனால் வாகன இறக்குமதி மற்றும் விற்பனையில் ஈடுபடும் முகவர் நிலையங்கள் பெரும் நட்டத்தை சந்தித்துள்ளன.

கடந்த நவெம்பரில் அமுல்படுத்தப்பட்ட இந்தியாவின் மோட்டார் வாகனங்கள் மீதான இலங்கையின் இறக்குமதித் தீர்வை அதிகரிப்பானது இந்தியத் தொழில்துறையை பாதித்தபோதிலும்கூட இந்திய மோட்டார் வாகன உற்பத்தியாளரான ராகுல் பஜாஜ் உள்ளடங்கலாக இந்திய தொழில் அதிபர் அடி கொட் ரெஜ் தலைமையிலான இந்தியத் தொழில் வல்லுனர்கள் கொழும்புக்கு வருகை தந்திருந்தனர். இவர்கள் இலங்கையின் வாக்குறுதிகளுக்கும் அதன் செயற்பாடுகளுக்கும் இடையிலான வித்தியாசத்தை தெளிவாக அவதானிக்கத் தவறியிருக்கமாட்டார்கள்.

இந்தியாவுடனான வாகன இறக்குமதியில் பல்வேறு நிபந்தனைகளை விதித்த இலங்கை அரசாங்கம், அதேநேரத்தில் அம்பாந்தோட்டை மற்றும் கம்பகா போன்ற இடங்களில் உதிரிப்பாகங்களைக் கொண்டு கார்களை இணக்கும் ஆலைகளை அமைப்பதற்கான திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பில் சீனாவுடன் உடன்பாட்டைக் கைச்சாத்திட்டது. இத்திட்டமானது 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியானதாகும்.

இந்திய இலங்கை வர்த்தக நடவடிக்கையின் பெறுமதியானது 2011-2012 இல் 5.1 பில்லியன் டொலர்களாகக் காணப்படுகிறது. 2011-2012இல் இலங்கைக்கு இந்தியா 4.3 பில்லியன் டொலர்கள் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. இது இலங்கையின் மொத்த இறக்குமதியில் 22%ஆகும். 2009 இல் இலங்கை மிதான இந்தியாவின் முதலீடு 78 மில்லியன் டொலர்களாக காணப்பட்ட அதேவேளையில் 2012 இல் இத்தொகையானது 147மில்லியன் டொலர்களாகும்.

இலங்கையில் ஏற்கனவே இந்திய உற்பத்தி நிறுவனங்களான டாடா, பஜாஜ், கொட்ரெஜ் போன்றன தமக்கென தனியிடத்தைப் பிடித்துள்ளன. இதன் மூலம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகள் மேலும் அதிகரிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படு கின்றன. ஆனால், இந்த விடயத்தில் இலங்கை தனது மக்களின் நலன்களை அதிகம் கவனித்துச் செயற்பட வேண்டும். இலங்கை தனது பொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்தவேண்டுமெனில், இந்தியாவின் உறவைப்பேண வேண்டிய தேவையுள்ளது.

இதில் சீனாமீது பழிசுமத்துவதோ அல்லது சீனாவின் இலங்கை மீதான சிறிய நகர்வுகளை பழிசுமத்துவதிலோ எவ்வித பயனுமில்லை. சீனாவின் இலங்கை மீதான ஈடுபாடானது, எப்போதும் இதனை அரசியல் பிரச்சினையிலிருந்து விடுவிப்பதாகவுள்ளது. இலங்கையின் நலன் பேணுகின்ற உதவி வழங்குனரா இந்தியா உள்ள அதே வேளையில், சீனாவானது இலங்கையின் மிகப்பெரிய கடன் வழங்குனராக காணப் படுகின்றது.

சிக்கல் ஒன்று வரும்போது, உதவி வழங்குனரைவிட கடன்வழங்குனரை முன்னுரிமைப்படுத்துவது இயற்கையானதாகும். ஆனால், கடன் வழங்கியவர் எப்பொழுதும் தன்னை முதன்மைப்படுத்தவேண்டுமென கோரிக்கை விடுப்பது வழமையானதாகும். இதையே இலங்கை விடயத்தில் சீனாவும் செய்கிறது. இவ்வாறான சந்தர்ப்பங்களையும் சம்பவங்களையும் கருத்திற்கொண்டு, இந்திய அரசாங்கம் இலங்கையில் தன்தொடர்பான கொள்கைப்பாடுகளை மிகத்தீவிரமாக மதிப்பீடு செய்துகொண்டு இலங்கை விடயத்தில் தீவிர கவனம் செலுத்தவேண்டிய தக்க தருணம் இதுவாகும்.

*ஆர். ஹரிகரன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து துண்டிக்கப்பட்ட நிலையில் மக்கள் அந்தரிப்பு

## நிவாரணம் வழங்குமாறும் கோரிக்கை

(மல்லாவி)

முல்லை.மாவட்டத்தில் பெய்த தொடர் மழை காரணமாக மக்களின் பிரதான போக்குவரத்து வீதிகள் துண்டிக்கப்பட்டும் சேதமடைந்தும் காணப்படுகின்றன.

மாங்குளத்தில் இருந்து முல்லைத்தீவு செல்லும் ஏ 34 பிரதான வீதியிலுள்ள பாலங்களும் ஒட்டுசுட்டான் 9 ஆம் கட்டை வீதியிலுள்ள பாலங்களும் மிகவும் சேதமடைந்துள்ளன. இதனால் மாங்குளம், ஒட்டுசுட்டான் வரையான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இவ் வீதியால் நடந்து செல்பவர்கள் மட்டும் பயணிக்கக் கூடியதாக இருப்பதால் இது தொடர்பாக கிளிநொச்சி, முல்லை. மாவட்டங்களின் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் எஸ்.இளங்கீரனிடம் தொடர்பு கொண்டு வினவியபோது,

இவ்வீதியில் வெள்ள நீரினால் சேதமடைந்த பாலங்களை ஒரு சில நாட்களுக்குள் புனரமைப்பு செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார். அதுவரை மக்கள் புளியங்குளம், ஒட்டு சுட்டான் வீதியூடாக போக்குவரத்து சேவையை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பல கிராமங்களுக்கு செல்லும் வீதிகள் வெள்ள நீர் பாய்ந்து கொண்டிருப்பதால் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் மிக மோசமாக சேதமடைந்துள்ளது.

குறிப்பாக ஐயங்கன் குளம், புத்துவெட்டுவான் செல்லும் வீதிகள், விநாயகபுரம் செல்லும் பாலியாற்று வீதி, சிராட்டி குளம் செல்லும் பறங்கியாற்று வீதி என்பன ஆறுகள் பாய்வதன் காரணமாக போக்குவரத்து துண்டிக்கப்பட்டும் சேதமடைந்தும் காணப்படுகிறது. அத்துடன் பொதுமக்களின் உடமைகள் அழிவடைந்துள்ளதுடன் நெல் வயல்களுக்கு வீசுவதற்காக வைத்திருந்த பசளை வகைகள் நீரினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

கால்நடைகள் இறந்தும் காணாமலும் போயுள்ளது. மீள்குடியேற்றத்தின் பின் தற்காலிக வீடுகளில் வசித்து வந்த பல ஆயிரம் குடும்பங்கள் நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு அனர்த்த காலங்களில் உதவக்கூடிய அவசர உதவிகளான கூடாரங்கள், தறப்பாழ், பால்மா, நுளம்பு வலை, விளக்குகள் எதுவும் கையிருப்பில் இல்லாத நிலையில் அரச மற்றும் பொது அமைப்புக்கள் திணறுகின்றமையைக் காணக்கூடியதாகவுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட வந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட மக்களுடன் கதைத்து சில இடங்களுக்கு உதவி வழங்கிய போதும் பல இடங்களுக்கு வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தாராளமாக உதவ இதுவரை ஆரோக்கியமான நடவடிக்கை பல இடங்களில் மேற்கொள்ளப் படவில்லை.

எனவே, பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கு மிக விரைவில் அவசியமான உதவிகளை வழங்கி உதவுமாறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-15)

## சங்கடஹர சதுர்த்தி

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஶ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி விரதமும் 2013 ஆம் ஆண்டுப் பிறப்பு விசேட பூசையும் நாளை செவ்வாய்க் கிழமை காலை 7 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக தேவஸ்தான பிரதம குரு சிவஶ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (அ-9)

## வருடப்பிறப்பு விசேட பூஜை

யாழ்ப்பாணம் கடையிற் சுவாமிகள் குருவார அன்னசத்திர சிவன் தேவஸ்தானத்தின் 2013 ஆம் வருடப் பிறப்பு விசேட பூஜை நாளை செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக சிவ ஶ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (அ-9)

# கிராமங்கள், வயல்கள் தோறும் மண் அணைகள்

## அகற்றுமாறு மக்கள் கோரிக்கை

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் போர்ச்சூழலின் போது அமைக்கப்பட்ட மண் அரண்கள் பல கிராமங்களிலும் வயல் வெளிகளிலும் தற்போதும் அகற்றப்படாத நிலையில் உள்ளது.

குறிப்பாக யுத்தம் நடைபெற்ற கிராமப் பகுதிகளில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களில் சிலர் தமது குடியிருப்புக்கான நிலத்தில் தமது செலவிலேயே மண் அரண்களின் சில பகுதிகளை துப்புரவு செய்து குடியிருக்கின்றனர்.

இந்த மண் அரண்களுக்கு பக்கத்தில் இன்னமும் வெடி பொருட்கள் இருக்கலாம் என மக்கள் அச்சம் கொள்கின்றனர். அத்துடன் இந்த மண் அரண்களுக்கு அருகில் தோண்டப்பட்ட பள்ளத்தால் தற்போது பெய்த பெரு மழையின் போது பாய்ந்து வரும் மழை நீர் பெரும்பாலான வீதிகளையும் குடியிருப்பு வீடுகளை சேதமாக்கும் நிலையே ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த மண் அரண்களுக்கு அருகே முழுமையாக கண்ணிவெடிகள் அகற்றப்பட்டனவா? என்பதை உறுதி செய்வதுடன் பிறக்கப் போகும் புதுவருடத்திலாவது இந்த மண அரண்களை அகற்றுவதற்கான ஒழுங்குகளை செய்து குடியிருப்பு நிலங்களையும் வயற் காணிகளையும் நல்ல முறையில் பயன்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டுமென இம் மாவட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-254)

# அரசியல் தூண்டுதல்களினால் 4000 மாணவர்களின் கல்வி பாழ்

## அமைச்சர் டக்ளஸ் கவலை

குறுகிய எண்ணம் கொண்ட சில அரசியல் வாதிகளின் தூண்டுதலின் பேரிலேயே பல்கலைக்கழகத்தில் தீபமேற்றப்பட்டதேயல்லாது, உண்மையில் இறந்தவர்களை நினைவு கூர்ந்து அங்கு தீபமேற்றப்படவில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றஞ் சாட்டியுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் பட்டதாரி பயிலுநர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது அவர் அங்கு உரையாற்றும் போதே தெரிவித்தார்.

இறந்தவர்களுக்கு தீபமேற்ற தடையில்லை. தடை விதிக்கவும் முடியாதென்று சுட்டிக்காட்டிய அமைச்சர், திட்டமிட்ட நோக்கத்துடன் குழப்பங்களைச் செய்து விட்ட சிலர் 4 ஆயிரம் மாணவர்களின் கல்வியை குழப்பி விட்டார்கள் என்றும் கூறினார்.

சுதந்திரமாகவும் சமாதானமாகவும் நடமாடவும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் கூடிய இந்தக் காலத்தில் மாணவர்களின் கல்வியை தடை செய்ய எண்ணுகிறார்கள்.

இவ்வாறான வேலைகளுக்கு அரசாங்கம் ஒரு போதும் இடமளிக்காது என அவர் கூறினார்.

ஆரம்பத்தில் கை ஏந்த வைத்தவர்கள் இன்றுவரை கை ஏந்த வைக்க நினைக்கின்றார்கள். ஆனால் இந்தக் காலம் மாறிவிட்டது. தவறான அர்த்தத்தினை வெளிப்படுத்தி, குழப்பத்தினை ஏற்படுத்தியுள்ளார்கள். என்னிடம் கூறியிருந்தால் நான் அமைதி கிடைக்கும் வகையில் குழப்பத்தினை சுமுகமான நிலைக்கு கொண்டு வந்திருப்பேன் என அமைச்சர் மேலும் கூறினார். (அ-2)

# அரசாங்கத்திற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டம்

## ஐ.தே.க ஏற்பாடு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் மூன்று நாட்கள் போரட்டமொன்றை நடத்தவுள்ளதாக பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரையில் இந்தப் போரட்டம் நடத்தப்படவுள்ளது.

அரசாங்கத்தின் மக்கள் விரோத செயற்பாடுகளுக்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து கருத்தரங்குகள் மற்றும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சிவப்பு, மஞ்சள் மழை லண்டன் செல்கிறது

சிவப்பு மற்றும் மஞ்சள் மழை குறித்து மேலதிக பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக சேகரிக்கப்பட்ட மழைநீர் லண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. லண்டன் காடீப் பல்கலைக்கழகத்திற்கு இந்த மழை நீர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக நாட்டின் பல பாகங்களில் சிவப்பு மற்றும் மஞ்சள் மழை பெய்துவந்துள்ளது. எனினும் அநேக பிரதேசங்களில் மஞ்சள் மழையை விட சிவப்பு மழையே பெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)







கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் ஒளி விழா நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் உரையாற்றுவதையும் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் தொழில் முயற்சிகள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்


## சந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு

பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் அதிகரித்துள்ள நிலையில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலைமை தொடர்ந்தும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் குடும்பங்களில் பொருளாதாரமும் வாழ்வாதாரமும் வளம்பெறும் என ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி-ஆனந்தநகரில் முன்பள்ளிக் கட்டடத்தினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரை நிகழ்த்துகையில்,

நடைபெற்று முடிந்த யுத்தத்தின் விளைவாக பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களின் தொகை இன்று அதிகரித்து காணப்படுகின்றது. அண்மைக்காலமாக வெளியான தரவுகள் இது தொடர்பான அதிர்ச்சி தரும் தகவல்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. அத்தோடு வேலையற்றோர் பட்டியலிலும் பெண்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகின்றது. இந்நிலையினை மாற்றுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

இருப்பினும் சுயமுயற்சியில் பொருளாதாரத்தை ஈட்டும் அளவுக்கு பெண்களும் முன்னேற்றகரமான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றார். (அ-2)



முஸ்லிம் காங்கிரசின் பேராளர் மாநாடு நேற்று முன்தினம் காலை தெஹிவளையில் இடம்பெற்றது. இதன்போது கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம், தவிசாளர் பசீர் சேகுதாவூத், செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி, பைசல் காசிம் எம்.பி. ஆகியோர் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம்.

# கடும் மழையை அடுத்து நுளம்புகள் பெருக்கம்

(சிவநகர்)

அண்மையில் பெய்து வந்த பெருமழைக்கு முன்னரும் நுளம்புகளின் தொல்லை காணப்பட்டது. இருந்தபோதிலும் தற்போதைய பெருமழையின் பின்னர் நுளம்பு பெருக்கம் அதிகரித்து காணப்படுகிறது.

முன்னைய காலங்களில் சுகாதாரப் பகுதியினரால் ஒவ்வொரு கிராமத்தில் உள்ள வீடுகளுக்கும் மலத்தியோன் தெளிக்கும் வேலைத்திட்டங்கள் நடைபெற்று வந்தன.

மலத்தியோன் தற்போது தடை செய்யப்பட்டுள்ளது என்பது அறிய வருவதால் நுளம்பை தடை செய்யக்கூடிய வேறு ஏதாவது மருந்துகளையேனும் கிராமங்களில் உள்ள வீடுகளுக்கு தெளிப்பதன் மூலமே நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியும் என்று மக்கள் கருதுகின்றனர்.

இதேவேளை, மருந்து தெளிக்கும் நடவடிக்கையின் மூலம் பலருக்கு தொழில் வாய்ப்புக்களும் முன்னர் ஏற்பட்டிருந்தது.

எனவே, இவ் விடயத்தில் உரியவர்கள் கவனம் எடுத்து நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுப்பதன் மூலம் பலருக்கு குறுகிய கால தொழில் வாய்ப்பையும் வழங்கலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-3-254)

# பல்கலைக்கழக புகுமுக மாணவர்களின் கல்வி நடவடிக்கை மார்ச்சில்

2011 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவான புது முக மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கை கள் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடங்களை விட எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில் 5 ஆயிரத்து 609 மாணவர்கள் மேலதிகமாக பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படவுள்ளனர்.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சுப்ரீம் சட் - 1 செய்மதி தனது பணிகளை ஜூனில் ஆரம்பிக்கும்

கடந்த நவம்பர் 27 ஆம் திகதியன்று விண்ணுக்கு ஏவப்பட்ட சுப்ரீம் சட் -1 செய்மதி, தமது நடவடிக்கைகளை 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக சுப்ரீம் சட்டின் பிரதம அதிகாரி, விஜித் பீரீஸ் தெரிவித்துள்ளார்.

குறித்த செய்மதி சரியான இடத்தில் நிலைகொள்ள செய்யப்பட்டு பின்னர் அதன் நடவடிக்கைகளை மேற்கொள்ள இன்னும் 6 மாதங்கள் செல்லும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந் நடவடிக்கைகளுக்காக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் அனுமதிக்காக காத்திருப்பதாகவும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் செய்மதி தொலைக்காட்சியை ஆரம்பிக்கும் பணிகளும் இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# தர்மபுரம் மகா வித்திக்குள் மழை வெள்ளம் உட்புகுந்தது

## ஆவணங்களும் சேதம்

(புளியம்பொக்கணை)

கடந்த சில நாட்களாக பெய்த கடும் மழையினால் தர்மபுரம் மகா வித்தியாலயத்திற்குள் வெள்ளம் புகுந்து பெறுமதிமிக்க ஆவணங்களை சேதமாக்கியுள்ளது.

கடந்த 28 ஆம் திகதி இரவு மழை நீர் இரண்டு அடிவரை பாடசாலைக்குள் புகுந்ததால் அலுவலகம், புத்தக களஞ்சியம், நூலகம் என்பன மழை நீரால் சேதமடைந்தன. மேலும் இவற்றுக்குள் இருந்த கணனிகள், பாடசாலை ஆவணங்கள், புத்தகங்கள் என்பன மழை வெள்ளத்தில் தோய்ந்தன.

மேற்படி ஆவணங்கள் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், இராணுவத்தினரின் பங்களிப்புடன் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளது. (அ-3-263)

# ஆயர் மீதான விசாரணைக்கு கிறிஸ்தவ அமைப்புக்கள் கண்டனம்

மன்னார் பேராயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியமைக்கு கிறிஸ்தவ ஒத்துழைப்பு அமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டமை தொடர்பில் மன்னார் பேராயர் கருத்து வெளியிட்டிருந்தார். இதற்கு முன்னர் சில தடவைகளும் மன்னார் ஆயரிடம் விசாரணை நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தவ மத கோட்பாடுகளுக்கு அமை[illegible]வாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக தைரியமான முறையில் மன்னார் பேராயர் குரல் கொடுத்து வருவதாகவும் இது பெருமையளிப்பதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனநாயகத்திற்காகவும் நீதிக்காகவும் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் எழுப்பப்படும் குரல்களுக்கு புலி ஆதரவு முத்திரை குத்தப்படுவதாகக் குற்றம் சுமத்தியுள்ளது. (அ-2)

# சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்

## மீண்டும் கருணாநிதி வலியுறுத்து

நாம் சேது சமுத்திர திட்டத்தை உருவாக்க வேண்டும். அத்திட்டத்தை நிறைவேற்றி அதன் பயன்களைப் பெறவேண்டும். இத்திட்டத்தை நிறைவேற்றினால் இலங்கையைச் சுற்றி வர வேண்டியிருக்காது என கருணாநிதி தெரிவித்துள்ளார்.

மத்திய நிதி மந்திரி ப.சிதம்பரம் பற்றி எழுதப்பட்ட ப. சிதம்பரம் ஒரு பார்வை என்ற புத்தகத்தின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

தமிழன் நலன் பேணும் அனைவரும் சேது சமுத்திர திட்டம் நிறைவேற குரல் கொடுப்பார்கள்.

அண்ணா தமிழகம் முழுவதும் 27.03. 1967 இல் சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என குரல் எழுப்பினார். மேலும் தூத்துக்குடி துறைமுகத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றார். அதை காமராஜர் வரவேற்றார்.

இப்போதுள்ள நிலையில் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இல்லை என்றால் ஆயிரத்து 200 கிலோ மீற்றர் தூரம் இலங்கையை சுற்றி வரவேண்டும்.

திட்டத்தை நிறைவேற்றினால் சுற்றிவர வேண்டி இருக்காது. ஆனால், அந்த திட் டம் இன்றும் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

அப்போது தி.மு.க., அ.தி.மு.க. தேர்தல் அறிக்கைகளில் எல்லாம் சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்று கூறப்பட்டு வந்தது.

தமிழனுக்கு உள்ள தலையெழுத்து, அன்று சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று உறுதியாக கூறியவர்கள் எல்லாம் இன்று அந்த திட்டத்தை கைவிட மத்திய அரசை வலியுறுத்துகிறார்கள். இது சாபக்கேடாகும்.

சேது சமுத்திர திட்டத்தால் வாணிபம் பெருகும். வியாபாரம் செழிக்கும். பொருளாதாரம் வளரும். எனவே, இந்த திட்டத்தை நிறைவேற்ற வலியுறுத்த வேண்டும். சேது சமுத்திர திட்டத்திற்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார். சோனியாகாந்தி முன்னிலை வகித்தார்.

ஆனால், திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. திட்டம் நிறைவேறினால் தமிழனுக்கு நிறைய பலன்கள் கிடைக்கும்.

அந்த திட்டத்தை தனது 67 ஆவது பிறந்த நாளில் நிறைவேற்றி தருவதாக ப.சிதம்பரம் உறுதி அளிக்க வேண்டும்.

தமிழனை வாழ்விக்க ப.சிதம்பரம் எடுத்த முடிவு கல்வெட்டில் இடம்பெறும். அதை நிறைவேற்ற சூளுரையை நாம் எடுக்க வேண்டும். எனவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தரும் பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸை விரும்பிய திக்கில் இழுத்துச்செல்லமுடியாது

## அமைச்சர் ஹக்கீம் கர்ச்சிப்பு

(கொழும்பு)

கட்சி எதிர்நோக்குகின்ற சவால்களுக்கு மத்தியில் புதிய ஆண்டின் ஆரம்பத்திலேயே ஓர் அக்கினிப் பரீட்சை நடைபெறப் போகின்றது. அதற்கு எப்படி முகம்கொடுப்பது? என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசியத் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் கேள்வியெழுப்பியுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 24 ஆவது பேராளர் மாநாடு தெஹிவளை ஜய சிங்க மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது அதன் இரண்டாவது அமர்வின் இறுதியில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் உரையாற்றுகையில்,

இன்று பிரேரணைகளையும் நாம் நிறைவேற்றி இருக்கிறோம். அந்த பிரேரணைக்கமைய பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாகிய நாம் எட்டுப்பேரும் அந்த அக்கினிப் பரீட்சையை எதிர்கொள்ள இருக்கிறோம்.

என்ன சட்டமூலமாக இருந்தாலும் கட்சியின் கொள்கை, கோட்பாட்டிற்கமைய அவற்றை எதிர்கொள்வதற்கு தயார் நிலையில் இருக்கின்றோம். ஏற்கனவே மாகாண சபையில் அந்த அனுபவம் ஏற்பட்டது. இதனைக் கட்சியின் போராளிகள் வழிபார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

எனவே புதிய அதியுயர் பீடத்துக்கு இருக்கின்ற முதலாவது பணி அக்கினிப் பரீட்சையை எதிர்கொள்வதற்கான ஒரு தீர்மானத்தை மேற்கொள்வதாகும். அந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரை பாராளுமன்றத்தில் ஒற்றுமையாக எமது உறுப்பினர்கள் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை உறுதியானது.

முஸ்லிம் காங்கிரஸை தாம் விரும்பிய திக்கில் இழுத்துக்கொண்டு போகலாம் என சில பத்திரிகைகள் நினைக்கின்றன. அவர்களது தேவைகளுக்கமைவாக எமது கட்சி செல்லமுடியாது. நாம் பிரயோக அரசியலைச் செய்கிறோம். ஆனால் கட்சியின் அடிப்படையை தாரை வார்க்கமுடியாத ஒரு முக்கியமான சவாலை நாம் முதலில் எதிர் நோக்கியிருக்கிறோம். எனவேதான் இந்தப் பேராளர் மாநாடும் இதில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களும் மிகவும் முக்கியம் வாய்ந்தவையாக இருக்கின்றன.

அரசாங்கத்தோடு நாம் சில முக்கிய விடயங்களை கதைத்திருக்கிறோம். அரச மேல்மட்ட அமைச்சர்கள் சில உத்தரவாதங்களை தந்திருக்கிறார்கள். அவ்வாறான உத்தரவாதத்தை தந்த அமைச்சர் ஒருவரே அடுத்த சில நாட்களில் எங்கள் வாக்குகளை பாராளுமன்றத்தில் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

நாங்கள் ஒன்றாக இருந்து ஒற்றுமையாக செயற்படுவது எமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு முக்கியமானது. நாங்கள் தனித்துவமான அரசியல் செய்கின்ற இயக்கத்தினர் என்ற காரணத்தினால் பழிவாங்கப்படுகிறோம். நாங்கள் இரண்டறக் கலந்து சங்கமமாகாத கட்சியினர் என்ற காரணத்தினால் ஓரக்கண்ணால் பார்க்கப்படுகிறோம்.

கிழக்கு மாகாண அமைச்சர்களுக்கு அவர் நண்பராக இருக்கிறார் என்பது வேறு விடயம். ஆனால் என்னவாக இருந்தாலும் இரண்டு வருடங்களுக்கு மட்டும்தான் அமைச்சராக இருக்கமுடியும். இதனை நான் மிகவும் உறுதியாகவும் அறுதியாகவும் கூறுகின்றேன்.



நாங்கள் அரசாங்கத்தை விட்டுவிட்டுப் போகமாட்டோம். அதற்கான ஆணையை மக்கள் எங்களுக்குத் தரவில்லை. ஆனால் எங்களது சுய கௌரவத்தையும் கட்சியின் தனித்துவத்தையும் இழப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை என்றார். (அ-2)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர் நிவாரணம்

## அமைச்சர் அமரவீர உறுதியளிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிப்படைந்த மக்களுக்கு சமைத்த உணவு மற்றும் நிவாரணங்களை தொடர்ச்சியாக தேவையான காலப்பகுதி வரை வழங்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிப்படைந்த மக்களை பார்வையிடுவதற்காக நேற்று வவுனியாவிற்கு விஜயம் செய்த அமைச்சர் மக்களிடம் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்த பின்னரே பிரதேச செயலாளர்களுக்கு இவ்வாறு உத்தரவிட்டார்.

அங்கு ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர்,

இலங்கை பூராகவும் அனர்த்தத்தால் பலர் பாதிப்படைந்துள்ளனர். இவ்வாறானவர்களின் நிவாரணத்திற்கென 243 மில்லியன் ரூபா உணவு வழங்குவதற்காகவும் ஆயிரத்து 500 மில்லியன் ரூபா வீடமைப்புக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் உத்தரவிற்கமைய பாதிப்படைந்த அனைவருக்கும் நிவாரணங்கள் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமைத்த உணவுகளை ஒருவாரத்திற்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதுடன் வெள்ளம் வடியாத பிரதேசங்களில் மேலும் ஒரு வாரத்திற்கு சமைத்த உணவு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன் அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களையும் வழங்க ஏற்பாடுகள் மேற்கெள்ளப்படவுள்ளது.

இதேவேளை பாதிப்படைந்த மக்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

தொடர்ச்சியாக வெள்ளப்பாதிப்பு உங்களுக்கு ஏற்டுமாயின் வேற்று இடத்தில் காணி மற்றும் வீடு வழங்கும் பட்சத்தில் செல்வதற்கு விருப்பம் உள்ளதா? என வினவியிருந்த நிலையில் அதற்கு வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவை சேர்ந்த களுகுண்ணாமடு, விஜயபாகம கிராம மக்கள் சிலர் விருப்பம் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை வவுனியா பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த புதுக்குளம் கிராமத்திலும் சிலர் விருப்பம் தெரிவித்திருந்த நிலையில் அவர்களுக்கான காணிகளை ஒழுங்கமைக்குமாறும் அது தொடர்பில் தான் அரசாங்க அதிபரிடம் கூறுவதாகவும் பிரதேச செயலாளரிடம் தெரிவித்ததுடன் வீடுகள் அமைப்பதற்கு முதற்கட்டமாக ஒரு இலட்சம் ரூபா வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை புதுக்குளம் கிராமத்தில் ஒரு பகுதி கிராமத்திற்கு செல்லும் பாதை தொடர்பில் மக்கள் அமைச்சரிடம் எடுத்துக் கூறியதற்கு இணங்க அதற்கான மதிப்பீட்டினை வழங்குமாறும் தெரிவித்ததுடன் செஞ்சிலுவைச் சங்கத்தினுடாக பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்படும் எனவும் உத்தரவாதமளித்திருந்தார்.

அத்துடன் பாதிப்படைந்தவர்களுக்கு ஆயிரத்து 500 ரூபா வீதம் அத்தியாவசிய தேவைகள் மற்றும் பாடசாலை மாணவர்களின் தேவை கருதி வழங்குமாறும் வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரனிடம் கூறியிருந்தார். (அ-9-266)

## மூன்று மீனவ படகுகள் தீக்கிரையாகின

தங்காலையில் நேற்றுமுன்தினம் இரவு மூன்று மீனவப் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களும் தீக்கிரையாக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து பொலிசார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.


ஆரம்ப விசாரணையின்படி, தனிப்பட்ட குரோதம் காரணமாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

## ஊசி மருந்துக் குப்பியில் கண்ணாடித் துண்டு

(கொழும்பு)

களுபோவில போதனா வைத்தியசாலையில் ஊசி மருந்துக் குப்பியொன்றிலிருந்து கண்ணாடித் துண்டொன்று கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடந்து நாட்டிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் இத்தொகுதி சார்ந்த ஊசி மருந்துக் குப்பிகள் பயன்படுத்தப்படுவதை உடனடியாக தடை செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.


மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாக அதிகாரியொருவர் கூறினார். இந்த ஊசி மருந்துகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை என தெரிய வருகின்றது. (அ-2)



வவுனியாவில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்காக நேற்றைய் தினம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர வவுனியாவிற்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடுவதையும் பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றினைப் பார்வையிடுவதையும் உதவிப்பொருட்களை வ ழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: பூந்தோட்டம், குருமன்காடு செய்தியாளர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்மோகன், சோனியா அஞ்சலியுடன் புதுடில்லி மாணவியின் உடல் தகனம்



பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி சிங்கப்பூர் மருத்துவமனையில் உயிரிழந்த மாணவியின் உடல் டில்லியில் தகனம் செய்யப்பட்டுள்ளது.

மாணவியின் உடலுடன் சிங்கப்பூரில் இருந்து நேற்று நள்ளிரவு 12.30 மணிக்கு புறப்பட்ட விமானம் அதிகாலை 3.30 மணிக்கு டில்லி இந்திராகாந்தி விமான நிலையத்தை வந்தடைந்தது.

பின்னர் தனியார் மருத்துவமனையின் அம்புலன்ஸ் மூலம் அவரது உடல் விமான நிலையத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டது. சிங்கப்பூரிலிருந்து கொண்டு வரப்பட்ட மாணவியின் உடல் டில்லி வந்த சில மணி நேரங்களில் தகனம் செய்யப்பட்டது.

மாணவியின் உடலுக்கு பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி நேரில் அஞ்சலி செலுத்தினர். மேலும் மாணவியின் பெற்றோரை இருவரும் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர். இதில் ஆர்.பி.சிங் பங்கேற்றிருந்தார்.

**அறுவர் மீதும் கொலை வழக்கு**

மாணவியை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கிய ஓட்டுநர் ராம்சிங், அவரது சகோதரர் முகேஷ், அக்ஷய் தாக்குர், பவன் மற்றும் வினய் ஆகிய 6 பேர் மீது டில்லி பொலிஸார் கொலை வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இது குறித்து டில்லி சட்டம் ஒழுங்கு ஆணையர் தர்மேந்திரகுமார் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்தபோது,

இவ்வழக்கு தொடர்பாக எதிர்வரும் ஜனவரி 3 ஆம் திகதிக்குள் குற்றப் பத்திரிகையைச் சமர்ப்பிப்போம்.

இவ்வழக்கில் கொலைச் குற்றத்துக்கான இந்திய தண்டனை சட்டத்தின் 302ஆவது பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணையை விரைவு நீதிமன்றத்தில் தினசரி அடிப்படையில் நடத்துவதற்காக சிறப்பு அரசு சட்டத்தரணி நியமிக்கப்பட்டுள்ளார்.

குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனையைப் பெற்றுத்தர தீவிர முயற்சி மேற்கொள்வோம்.

இத்துயரச் சம்பவத்துக்காக மற்றவர்களைப் போலவே நாங்களும் வருத்தமடைந்துள்ளோம். பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

**பெண்களுக்கு தற்காப்புப் பயிற்சி**

பெண்களுக்கெதிராக அதிகரித்து வரும் பாலியல் வன்முறைகளைத் தடுக்க கல்லூரி மாணவிகளுக்கு தற்காப்புக் கலை பயிற்சி வழங்க பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

இது குறித்து மகாராஷ்டிரா புனே மாநகர பொலிஸார் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளான டில்லி மாணவியின் உயிரிழப்பை அடுத்து பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க வேண்டியது அவசியமாகிறது.

இதில் வேலைக்குச் செல்லும் பெண்கள், குடும்பத் தலைவிக்ள் என யார் வேண்டுமானாலும் பங்கேற்கலாம். பயிற்சி பெற விரும்புபவர்கள் தங்களைப் பற்றிய விபரங்களை பொலிஸ் தலைமை அலுவலகத்தில் தெரிவிக்க வேண்டும்.

தற்காப்பின் முதற்கட்டமாக பெண்கள் மிளகு தூள், மிளகாய்த் தூள், தெளிகருவிகளை எப்போதும் தங்களுடன் கொண்டு செல்ல வேண்டும்.

இந்த உபகரணங்கள் மூலம் ஆறு அடிக்கு அப்பால் இருந்தே எதிராளிகள் மீது தாக்குதல் தொடுக்கலாம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# கடத்தப்பட்ட இராணுவத்தினர் தலிபான்களால் சுட்டுக்கொலை

**—பாகிஸ்தான்—**

தலிபான்களால் கடத்தப்பட்ட பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் 20 பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள சோதனை சாவடிகளில் இருந்த 20இற்கும் மேற்பட்ட துணை நிலை இராணுவத்தினரை தலிபான்கள் கடத்தி சென்றனர்.

இவர்களை மீட்பதற்கான முயற்சிகளை இராணுவத்தினர் மேற்கொண்டும் தோல்வியில் முடிந்தது.

இந்நிலையில் 20 பேரின் உடல்களை பொலிஸார் மீட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையே பாகிஸ்தான், அமெரிக்காவுடனான உறவை முறிக்காத பட்சத்தில் நாங்கள் ஆயுதங்களை கீழே போடப் போவதில்லை என தலிபான்கள் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## இந்திய பெண்களும் பர்தா அணிய வேண்டும்

**அருணகிரிநாதர் தெரிவிப்பு**

இஸ்லாமியப் பெண்கள் எப்படி பர்தா அணிகின்றார்களோ அதே போல தமிழ்நாட்டுப் பெண்களும் ஒட்டுமொத்த இந்தியப் பெண்களும் பர்தா அணிய வேண்டும் என மதுரை ஆதீன அருணகிரிநாதர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் ஆண்களின் வக்ரப் பார்வையிலிருந்து பெண்கள் தப்ப முடியும். பாலியல் குற்றங்களையும் குறைக்க முடியும்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில்,

இஸ்லாமியப் பெண்கள் பர்தா அணிவது வழக்கம். கணவரைத் தவிர வேறு யாரும் தங்களது உடலைக் கண்டு விடக் கூடாது என்பதற்காக இந்தக் கட்டுப்பாட்டை அவர்கள் கையாளுகின்றனர்.

இதேபோல தமிழ்நாட்டுப் பெண்களும் இந்தியப் பெண்களும் கூட பர்தா அணிய வேண்டியது அவசியம். இதன்மூலம் ஆண்களின் வக்ரப் பார்வையிலிருந்து பெண்கள் தப்ப முடியும். மேலும் பாலியல் குற்றங்களையும் குறைக்க முடியும் என்றார். (அ-2)



ஜப்பானின் புதிய பிரதமர் சின்ஷோ அபே ஒகுமாவில் உள்ள அணுசக்தி தொழிற்சாலையை பார்வையிட்டு அங்குள்ளவர்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதைப் படத்தில் காணலாம்.

## அட்லாண்டிக் கடலில் படகு கவிழ்ந்தது; 22 பேர் உயிரிழப்பு

மேற்கு ஆபிரிக்க நாடான கினியா பிஸாவில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில்22 பேர் பலியாகியதுடன் 69 பேரைக் காணவில்லை. கினியா பிசா நாட்டின் பலோமா தீவில் இருந்து பிஸாவ் நகருக்கு அட்லாண்டிக் கடல் வழியே 97 பேரை ஏற்றி கொண்டு சென்றது.

அளவுக்கு மீறி ஆட்கள் ஏற்றப்பட்டதாலும் அலைகளின் சீற்றம் காரணமாகவும் குறித்த படகு நடுக்கடலில் கவிழ்ந்ததில் 22 பேர் பலியாகினர். அவர்களின் உடல்கள் [illegible] தெரிவித்தார்.

மேலும் 69 பேரைக் காணவில்லை. அவர்களைத் தேடும் பணியில் மீட்புக்குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (அ-2)

# ரஷ்யாவில் விமான விபத்து! 4 பேர் பலி; 8 பேர் காயம்

ரஷ்யாவின் பயணிகள் விமானமொன்று விபத்துக்குள்ளானதில் 4 பேர் பலியாகியுள்ளதுடன் 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ரஷ்யாவின் ரெட் விங்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான இந்த விமானம் செக் குடியரசுக்குச் சென்று விட்டு பயணிகளை இறக்கிவிட்டு வினுகோவா விமான நிலையத்துக்கு திரும்பியது.

தரையிறக்கப்படும்போது ஓடுபாதையை விட்டு விலகி சாலையையொட்டி நின்று உடைந்து தீப்பிடித்தது. குறித்த விமானம் வேறு எந்த வாகனம் மீதும் மோதவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானியின் தவறே விபத்துக்குக் காரணம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது. (அ-2)

# பெனாசீரின் கொலை விவகாரம்; அறிக்கையை மறைத்தார் சர்தாரி

**பாக்.பத்திரிகை தகவல்**

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவின் படுகொலை குறித்த விசாரணை அறிக்கையை வெளியிட ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி தடை விதித்தார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 2007ஆம் ஆண்டு டிசெம்பர் 27ஆம் திகதி ராவல்பிண்டியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ படுகொலை செய்யப்பட்டார்.

இது குறித்த விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நிலையில் பெனாசீரின் ஐந்தாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவர் சார்ந்திருந்த பாகிஸ்தான் மக்கள் கட்சி சார்பில் கரிகுடா பக்ஸ் பகுதியில் கடந்த 27ஆம் திகதி வியாழக்கிழமை மாபெரும் பேரணி நடைபெற்றது.

இந்தப் பேரணி நடப்பதற்கு முன்னதாக பெனாசீர் படுகொலை குறித்த விசாரணை அறிக்கையை பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மத்திய நிர்வாகக் குழுவில் வெளியிடத் திட்டமிட்டிருந்தார் உள்துறை அமைச்சர் மாலிக்.

ஆனால், இதற்கு பெனாசீர் பூட்டோவின் கணவர் சர்தாரி தடை விதித்துள்ளார். இத்தகவலை மாலிக் வட்டாரம் உறுதிப்படுத்தியுள்ளது.

பெனாசீர் பூட்டோவின் நினைவு தின நாளில் விசாரணை அறிக்கையை வெளியிட்டால் அதன் மூலம் பிலாவல் பூட்டோ தன்னுடைய அரசியல் செல்வாக்கை வளர்த்துக் கொள்ளக் கூடும் எனக் கருதியே விசாரணை அறிக்கைக்கு சர்தாரி தடை விதித்துள்ளார் என பாகிஸ்தான் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ-2)

## உலக தரிசனம்

# வரலாறு காணாத சவால் புகுஷிமாவை சீர்செய்வதே

**ஜப்பானிய பிரதமர் ஷின்சோ**

சுனாமியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட புகுஷிமா பகுதியை சுத்தப்படுத்தும் பணி முன்னெப்போதும் இல்லாத சவாலான பணி என ஜப்பானின் புதிய பிரமதர் ஷின்சோ அபே கூறியுள்ளார்.

பிரதமராக பொறுப்பேற்றுக் கொண்ட பின் புகுஷிமா பகுதியில் நேற்று முன்தினம் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது,

கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஏற்பட்ட பூகம்பத்துக்கு பின் ஏற்பட்ட சுனாமி காரணமாக புகுஷிமாவில் உள்ள அணு உலை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதனால் அப்பகுதியில் கதிர் வீச்சு பரவியது. இந்நிலையில் அதைச் சுத்தப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

இது மனித வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத சவாலான பணி. இதில் வெற்றி பெற்றுவிட்டால் ஜப்பான் மற்றும் புகுஷிமா மறுநிர்மாணம் சாத்தியமாகும் என்றார். (அ-2)

# என் வழி தனி வழி; அரசியலிலும் இதுதான்

**கூறுகிறார் ரஜினிகாந்த்**

நான் அரசியலுக்கு வந்தால் என் வழி தனிவழியாகத்தான் இருக்குமென ரஜினிகாந்த் கூறியுள்ளார்.

சென்னையில் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் ஒரு பார்வை என்ற நூல் வெளியீட்டு விழா இடம் பெற்றது.

இந்நிகழ்வில் ரஜினிகாந்த் கலந்து கொண்டு அரசியலுக்கு வருவது பற்றி உரையாற்றுகையில்,

நமது இளைய சமுதாயமும் மாணவ சமுதாயமும் அரசியல்வாதிகளுக்கு எதிராக சட்டங்களுக்கு எதிராக குரல் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

எனவே அவர்கள் விழித்துக் கொண்டுவிட்டார்கள் என்பது சிதம்பரத்துக்கு தெரியும். அதற்கும் முன்பு அரசியல்வாதிகள் விழித்துக் கொள்ளாவிட்டால் நாட்டில் மிகப் பெரிய புரட்சி வெடிக்கும்.

என்னுடைய ரசிகர்களை போல நீங்கள் ஏன் அரசியலுக்கு வரக் கூடாது என்று சிதம்பரம் என்னிடம் கேட்பார்.

நான் அரசியலுக்கு வந்தால் அது தனி வழியாக இருக்கும் என்பது அவருக்குத் தெரியும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்பதற்கே உறக்கம்; வெல்வதற்கே தோல்வி; எழுவதற்கே வீழ்ச்சி.
- ராபர்ட் பிரவுனிங்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மாயனோடு உலகம் முடியுமென்றாய் நீதான் முடிந்தாய் போய்வா!

2012ஆம் ஆண்டுக்கு கை அசைத்து விடை கொடுக்கும் நேரம் இது. பெரிதாக நீ எதுவும் செய்துவிடவில்லை என்றாலும் உலகம் முழுவதற்கும் மரண பயம் ஏற்படுத்தி மக்களைக் கிடுநடுங்கவைத்த பெருமை உன்னைத் தவிர முன்னைய ஆண்டுகளுக்குக் கிடையாது எனலாம்.

சந்திரனில் கல் எடுத்து செவ்வாயில் கோயில் கட்டி யாழ்ப்பாணத்திலிருந்து குருக்களை கூட்டிச்சென்று கும்பாபிஷேகம் செய்யும் அளவிற்கு விஞ்ஞானம் அண்டம் கடந்து சாதனை படைத்து நிற்கும் வேளையில், விழுகின்ற விண் கல்லை அண்டவெளியில் வைத்து கடத்திச்சென்று தமக்க் கதிரையாக்கிக்கொள்கின்ற விஞ்ஞானிகள் வாழ்கின்ற நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையம் இருக்கின்ற வேளையில்,

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட மாயன் கலண்டரைக்காட்டி உலகம் அழியப் போகின்றது எனக் கூறி குலைநடுங்கவைத்த நீ இன்றோடு உன் ஆயுளை நிறைவுசெய்கிறாய்.

இந்த வேளையில் உனக்குப் பிரியாவிடை கூறுகின்ற நேரத்தில், உனது காலத்தில் நடந்ததை ஒருகணம் திரும்பி பார்த்தால், ஈழத்தமிழர்கள் விடயத்தில் நீ நல்லது எதுவும் செய்யவில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி உன் இறுதிக்காலத்தில் பல்கலைக்கழக இயங்கு நிலைக்குக் குந்தகம் செய்து செல்வதால் எங்களுக்கு உன்மேல் வெறுப்பு அதிகமே.

இது தவிர, தேவையான காலத்தில் மழையைத்தராது வேளாண்மைக்கு வேதனை கொடுத்த நீ உன் இறுதிக்காலத்தில், மழையைக் கொட்டி வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தி நான்கு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களை நிர்க்கதியாக்கி விட்ட செயல் மாயன் கலண்டர் தோற்றதால் நீ கொண்ட கோபமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

இருந்தும் 2012 டிசம்பர் மாதம் 21ஆம் திகதியுடன் உலகம் முடிகின்றது என்று பயப்படுத்தினாலும் அத்தகையதொரு பிரளயம் நடைபெறாது உலகைக் காத்த உன்னிடம்; மனிதர் செய்த குற்றம் களைந்து குணங்கொள்கின்ற பெருந்தன்மை உண்டென்பதை நினைக்கும் போது எம் கன்னத்தின் ஓரங்கள் நனைக்கின்றன.

ஆம்! பெருமை மிகு 2012ஆம் ஆண்டே விடைதந்தோம் போய்வா! போகின்ற வேளையில் புதிதாக வருகின்றவனிடம் ஈழத்தமிழர்களின் இன்னலை நீயாவது தீர்த்துவை என்று மறக்காமல் சொல்லிவை.

# தெரிவுக்குழுவின் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அழைப்பாணை விடுக்கப்படவில்லை - கிரியெல்ல

(கொழும்பு)

ஜனவரி 3-ம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு இதுவரையில் தமக்கு அழைப்பாணை விடுக்கப்படவில்லை என்று, பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தமக்கான அழைப்பாணை கிடைக்கப்பெற்றால், அது குறித்து தெரிவுக்குழுவில் இருந்த நான்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பொதுத்தீர்மானம் ஒன்றுக்கு வரவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கெதிரான தெரிவுக்குழுவில் உறுப்பினர்களை எதிர்வரும் மூன்றாம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த தெரிவுக்குழுவை ரத்துச் செய்யுமாறு பிரதம நீதியரசர் தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணையைத் தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப்பிரேரணை தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை மீது எதிர்வரும் ஜனவரி 10, 11-ம் திகதிகளில் விவாதம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் ஜனவரி 8-ம் திகதி நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதற்கான அங்கீகாரம் பெறப்படவுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த ஆண்டு நாடாளுமன்றம் ஜனவரி மாதம் 8-ம் திகதி கூடவுள்ளது. 9-ம் திகதி எதிர்க் கட்சியினர் முன் வைத்துள்ள சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணைகள் மீதான விவாதம் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

# இரட்டை பிரஜா உரிமை பெறுவோர் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும் - கோத்தா

(கொழும்பு)

புலம்பெயர் நாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் போது, இதற்காக விண்ணப்பிக்கும் சம்பந்தப்பட்ட நபர்களை குழுவொன்றின் முன்னிலையில் அழைத்து முழுமையான விசாரணைகளை நடத்த வேண்டும் என இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார். குறித்த நபரின் பின்னணி தொடர்பில் விரிவான விசாரணையும் தேவை என்றும் அவர் கூறியுள்ளார்.

1980-ம் ஆண்டிற்குப் பின்னரான காலப்பகுதியில் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு அரசியல் தஞ்சம் கோரிச்சென்றவர்கள் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது.

இவ்வாறு சென்றவர்களில் பெரும்பாலானோர் கனடா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளின் பிரஜாவுரிமை பெற்றவர்களாக உள்ளனர்.

இதேவேளை, 2009 யுத்த முடிவுக்குப் பின்னர் புலம்பெயர்தமிழர்களுடன்நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ள புலிகளின் ஆதரவாளர்கள் சர்வதேசரீதியில் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றனர்.

இவ்வாறானவர்கள் இரட்டைப் பிரஜாவுரிமைக்காக விண்ணப்பிக்கும் போது இவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

இதற்காகக் குடியுரிமைச் சட்டங்களிலும், மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று கோத்தா தெரிவித்துள்ளார். (ந-11)

# வாள் வெட்டில் குடும்பஸ்தர் படுகாயம்

(கரவெட்டி)

வடமராட்சி வல்வெட்டித்துறை மதவடிப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் வல்வெட்டித்துறை மதவடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான எஸ்.இராசரத்தினம் (வயது 36) என்பவரே படுகாயமடைந்த நிலையில் வல்வெட்டித்துறை ஊரணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாய்த் தகராறில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இவ்வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றதாக தெரிய வருகின்றது.

இதுதொடர்பாகசந்தேகத்தின்பேரில் இரு சகோதரர்களை வல்வெட்டித்துறை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (ந-24)

# சுற்றுலா பயணிகளை கண்காணிக்க விசேட பிரிவு விரைவில் அறிமுகம்

(கொழும்பு)

சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்கு வந்து, பல்வேறுபட்ட சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை கண்காணிக்க விசேட பிரிவொன்று ஸ்தாபிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட பிரிவு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக அண்மைக்காலங்களில், சுற்றுலா நுழைவு அனுமதியுடன் இலங்கை வரும் வெளிநாட்டவர்கள், கணனி மோசடி மற்றும் விபசாரம் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் குறித்து விசேட பிரிவு கண்காணிப்பை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உல்லாசப் பயணத்துறை மற்றும் நாட்டிற்கு பங்கம் ஏற்படுத்தும் இப்படியான நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கண்காணிப்புப் பிரிவின் நடவடிக்கைகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் திணைக்களம், காவல்துறை மற்றும் சுற்றுலாத்துறை உட்பட பல அமைப்புகளுடனும் இணைந்து செயல்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கடந்தவாரம் 26 பெண்கள் உட்பட 100 சீன பிரஜைகள் கணனி மூலம் சட்டவிரோதமாக வங்கிக் கணக்கு மோசடியில் ஈடுபட்டதற்காக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இதுதவிர, வெளிநாட்டு நாணய மோசடி மற்றும் பாலியல் தொழில் போன்றவற்றில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## குடும்ப அமைதியே ஞானத்திற்கு வழி



நாம் ஆன்மீக வாழ்வு நடத்தமுயல்கிறோம். மற்றவர்கள் அவரவர் வழியில் நடப்பார்கள். நம் குடும்பத்திலேயேகூட அத்தகையவர்கள் இருப்பார்கள். மற்றவர்களின் வழியால் நம் ஆன்மீக வாழ்வு பாதிக்கப்படக்கூடாது. அவ்விதமாக எல்லோருக்கும் ஒத்ததாக நம் வாழ்வு முறையை அமைத்துக்கொள்ளவேண்டும். அதேசமயத்தில் நம் வாழ்வு ஆன்மீக வாழ்வாக இருக்கவேண்டும்.

மனவளக்கலையை நான் வகுத்தபோது குடும்பத்திலிருந்து அமைதி தொடங்கி சமுதாய விரிவாக என்ற நோக்கத்தோடு திட்டமிட்டுத்தான் அதனை வகுத்தேன்.

உலக சமாதானம் வேண்டுமானால் முதலில் அதற்கு மனித சமுதாயத்தில் அமைதி வந்தாகவேண்டும். தன்னிலை விளக்கத்தின்மூலம்தான் அந்த அமைதி வரமுடியும். தன்னிலை விளக்கத்தை நீங்கள் பெற்றுள்ளீர்கள். அதனைப் பெற்றுவிட்டால் மட்டுமே அமைதி வந்துவிடாது. தன்னிலை விளக்கம் என்ற விளக்கின் வெளிச்சத்தில் உங்கள் வாழும் முறையைச் சோதித்துக்கொள்ளவேண்டும். அவ்வெளிச்சத்தில் உங்கள் வாழ்க்கையைத் திட்டமிட்டு நடத்தவேண்டும்.

உங்கள் குடும்பத்தில் அமைதியிருக்கிறதா? பிணக்கிருக்கிறதா? என்று ஆராயுங்கள். எல்லோரது வாழ்க்கையிலும் பிணக்குத்தான் மலிந்திருக்கிறது. பிணக்கானது சிலர் வாழ்க்கையில் சிறிதாயிருக்கலாம். வேறு சிலரது வாழ்க்கையில் பெரிதாயிருக்கலாம். ஆகவே பிணக்கில்லாத வாழ்க்கையை எவன் அமைத்து அதன்படி வாழ்கிறானோ அவன்தான் ஞானி. ஒருவர் பெற்ற [illegible] பரிசோதிக்கக் கருவி ஒன்று இருக்குமானால் அது அவரது குடும்ப அமைதிதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வல்வெட்டி இளைஞர் வி.கவை வென்றது அளவெட்டி ஞானவைரவர் அணி

(மல்லாகம்)

வல்வெட்டித்துறை தெற்கு கழுகு விளையாட்டுக்கழகத்தின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு யாழ். மாவட்ட கழகங்களுக்கிடையில் நடாத்தப்படுகின்ற 10 ஓவர் களைக் கொண்ட மென்பந்துச்சுற்றுப் போட்டியின் ஆட்டம் ஒன்றில் அளவெட்டி ஞான வைரவர் விளையாட்டுக்கழக அணி வல்வெட்டி இளைஞர் விளையாட்டுக்கழக அணியை 8 விக்கெட்டுக்களினால் வெற்றி கொண்டுள்ளது.

மேற்படி போட்டியில் வல்வெட்டி இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதற்கமைய முதல் துடுப் பெடுத்தாடிய வல்வெட்டி இளைஞர் விளையாட்டுக்கழக அணியினர் 10 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 49 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் வல்வெட்டி இளைஞர் விளை யாட்டுக்கழக அணி சார்பில் சிந்துஜன் 10 ஓட்டங்களையும் பாபு 15 ஓட்டங்களையும் ரவி, சுஜீவன் ஆகியோர் தலா 6 ஓட்டங் களை யும் தமது அணிசார்பாக பெற்றுக்கொண் டனர். பந்து வீச்சில் அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி சார்பில் கட்சன் 3 விக்கெட்டுக்களையும் பிரசாத், வினோத் ஆகியோர் 2 விக்கெட்டுக்களையும் தமது அணி சார்பாக பெற்றுக்கொண்டனர்.

50 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடக்களமிறங்கிய அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழக அணியினர் 2 விக்கெட்டுக்களை மாத் திரம் இழந்து 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் அளவெட்டி ஞான வைரவர் விளையாட் டுக்கழக அணி சார்பில் கபிலன் 24 ஓட்டங்களையும் வினோ 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற் றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் வல்வெட்டி இளைஞர் விளையாட்டுக்கழக அணிசார்பாக சஜீவன், குரு ஆகியோர் தலா ஒரு விக்கெ ட்டுக்களைக் கைப்பற்றினர். துடுப்பாட்டம், பந்து வீச்சு இரண்டிலும் சிறப்பாக செயற்பட்ட அளவெட்டி ஞான வைரவர் விளையாட்டுக் கழக அணியினர் 8 விக்கெட்டு க்கள் வித்தியாசத்தில் வல்வெட்டி இளைஞர் விளையாட்டுக் கழக அணியினரை வெற்றி கொண்டமை குறிப்பிடத்த க்கது. (21)

# கரம் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம் கரம் சங்கத்தினால் நடத்தப்பட்ட கரம் சுற்றுப் போட்டியில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணப் பல்க லைக்கழக அணியும் ஆண்கள் பிரிவில் ஸ்ரீகாமாட்சி ஏ அணியும் வெற்றிமணி விளையாட்டுக்கழக அணியும் வெற்றிபெற்றுள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட ரீதியில் கரம் சுற்றுப் போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக கரம் திடலில் சனிக்கிழமை நடைபெற்றது.

பெண்கள் பிரிவில் இரு அணிகள் மட்டுமே கலந்து கொண்டதால், நேரடியாக இறுதிப்போட்டி நடத்தப்பட்டது. இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி சம்பியனாகியது, இரண்டாம் இடத்தை உடுவில் மான்ஸ் விளையாட்டுக்கழக அணி பெற்றுக்கொண்டது. ஆண்கள் பிரிவில் இறுதிப்போட் டிக்கு அணிகள் தெரிவாகியுள்ளன. முதலாவது அரையிறு திப் போட்டியில் ஸ்ரீகாமாட்சி சனசமூக நிலைய ஏ அணியை எதிர்த்து ஸ்ரீகாமாட்சி பி அணி மோதியது.

இப்போட்டியில் ஸ்ரீகாமாட்சி ஏ அணி வெற்றி பெற்றது. இர ண்டாவது அரையிறுதிப் போட்டியில் மணி விளையாட்டுக் கழ கத்தை எதிர்த்து உடுவில் மான்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. மணி விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

# விடை பெற்றார் மிஸ்டர் கிரிக்கெட்



அவுஸ்திரேலிய அணியின் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர் மைக்கல் ஹசி சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இலங்கைக்கெதிராக சிட்னியில் இடம்பெறவுள்ள 3 ஆவது டெஸ்ட் போட்டி அவரது இறுதி டெஸ்ட் போட்டியாக அமையவுள்ளதோடு இலங்கைக்கெதிரான இருபது - 20 தொடரின் பின்னர் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அவர் அறிவித்துள்ளார்.

37 வயதான மைக்கல் ஹசி, சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான தேவையான உற்சாகமும் ஆர்வமும் தொடர்ந்து காணப்படவில்லை எனத் தெரிவித்தே ஓய்வினை அறிவித்துள்ளார். இந்த முடிவை அவுஸ்திரேலியாவின் இந்தப் பருவகாலம் ஆரம்பிக்கும் போதே முடிபு செய்திருந்ததாகத் தெரிவித்த அவர் தான் சரியான முடிவை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவைச் சர்வதேசப் போட்டிகளில் பிரதிநிதித்துவப்படுத்தியமை கௌரவ மானது எனத் தெரிவித்த அவர் சர்வதேசப் போட்டிகளில் தன்னாலும் பிரகாசிக்க முடியும் என்பதை வெளிக்காட்டியமை இன்னமும் மகிழ்ச்சியானது எனவும் தனக்கு மாற்று வீரராகக் களமிறங்கும் வீரர் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்துவார் எனத் தான் உறுதியாக நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

மிஸ்டர் கிரிக்கெட் என அனைவராலும் செல்லமாக அழைக்கப்படும் மைக்கல் ஹசி உற்சாகமான இயல்புடன் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றும் ஒருவராக அறியப்பட்டவரா வார். அவுஸ்திரேலியா சார்பாக 78 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றிய அவர் 51.52 என்ற சராசரியில் 19 சதங்கள், 29 அரைச்சதங்கள் உள்ளடங்கலாக 6183 ஓட்டங்களையும் 185 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 48.15 என்ற சராசரியில் 3 சதங்கள், 39 அரைச்சதங்கள் உள்ளடங்கலாக 5442 ஓட்டங்களையும் 38 இருபது -20 சர்வதேசப் போட்டிகளில் 37.94 என்ற சராசரியில் 4 அரைச்சதங்கள் உள்ளடங்கலாக 721 ஓட்டங்களையும் குவித்துள்ளார். அடுத்தாண்டில் அவுஸ்திரேலியாவின் முக்கியமான இந்தியத் தொடர், இரண்டு ஆஷஷ் தொடர்கள் ஆகியன இடம்பெறவுள்ள நிலையிலேயே அவர் இந்த ஓய்வினை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கரப்பந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது


(மல்லாகம்)

கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் 2013 ஆம் ஆண்டு நடத்தப்படவுள்ள கரப்பந்தாட்ட சுற்றுப் போட் டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள மனோ றெக்கோடிங் சென் ரரிலும் பரந்தன் அவிஷன் புத்தகசாலையிலும் விண் ணப்படிவங்களை பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்ளை எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதிக்கு முன்பாக மேற்குறித்த விற்பனை நிலையத்தில் ஒப்படைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (21)

# சென்றல் விளையாட்டுக்கழகத்தின் தரப்படுத்தலில் யாழ். நகரில் சிறந்த அணியாக கே.சி.சி.சி.தெரிவு








யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 3ஆவது ஆண்டாக நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித்தெரிவு 11ஆவது அகவையில் (30.12.2012) வெளியிடப்பட்டுள்ளது.கே.சீ.சீ.சீ அணி 30 போட்டிகளில் பங்குபற்றி 22 போட்டிகளில் வெற்றி பெற்று ஒரு போட்டியில் சமநிலையையும் பெற்று 152.3 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்திலும் யாழ். ஜொனியன்ஸ் அணி 23 போட்டிகளில் பங்குபற்றி 14 போட்டிகளில் வெற்றி பெற்று 111.4 புள்ளிகளை பெற்று 2ஆம் இடத்திலும் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி 18 போட்டிகளில் பங்குபற்றி 14 போட்டிகளில் போட்டிகளில் வெற்றி 93.3புள்ளிகளைப்பெற்று 3ஆம் இடத்திலும் யாழ்.பல்கலைக்கழக அணி 4ஆம் இடத்திலும் ஜொலிஸ்ரார் அணி 5ஆம் இடத்திலும் யாழ்.சென்றல் அணி 6ஆம் இடத்திலும் பற்றீரியன் அணி 7ஆவது இடத்திலும் மானிப்பாய் பரீஸ் அணி 8ஆவது இடத்திலும் ஸ்ரான்லி அணி 9ஆவது இடத்திலும் யூனியன்ஸ் அணி 10ஆவது இடத்திலும் உள்ளன.

முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்ட கே.சீ.சீ.சீ. அணிக்கு ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணமும் பணப் பரிசிலும் வழங்கப்பட்டுள்ளது.

முதல் மூன்று அணிகளும் 2013 ஆண்டு ஜூலை மாதத்தில் நடைபெற இருக்கும் முக்கோண போட்டிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. 2010,2011 ஆம் ஆண்டுகளில் யாழ். பல்கலைக்கழக அணி முதலாம் இடத்தை பெற்றுக் கொண்ட[illegible] 2012 [illegible]ஆண்டு 124 போட்டிகள் நடைபெற்றது. யாழ். நகரில் துடுப்பாட்ட வரலாற்றில் இது ஓர் புதிய சாதனையாக உள்ளது. இவ் 124 போட்டிகளில் [illegible] 20, 30 ஓவர் கொண்ட போட்டிகளும் 3, 40 ஓவர் கொண்ட போட்டிகளும் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில் பாகிஸ்தானிடம் மண்கௌவியது இந்தியா



தோனியின் பொறுப்பான சதம் வீண் போக பாகிஸ்தான் அணி இந்தியாவை அதன் சொந்த மண்ணில் 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் 2 இருபது- 20 போட்டி, 3 ஒருநாள் போட்டியில் விளையாடி வருகின்றது.

இருபது-20 போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்று போட்டி சமனிலையில் முடிந்த நிலையில்,

நேற்று சென்னை சேப்பாக்கம் எம்.ஏ சிதம்பரம் சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற முதலாவது போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் முதலில் களத்தடுப்பை தேர்வுசெய்தார்.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பமே பேரிடியாக அமைந்தது. இந்திய அணியின் முதல் ஐந்து வீரர்களும் பாகிஸ்தானின் யூனைட்கான், மொகமட் இர்பான் ஆகியோரின் பந்துக்கு இரையாகினர். ஒரு கட்டத்தில் இந்திய அணி 9.4 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 29 ஓட்டத்தினை மாத்திரமே பெற்றிருந்தது.




பின்னர் ஜோடி சேர்ந்த இந்திய அணித் தலைவர் மகேந்திரசிங் தோனி– ரெய்னா ஜோடி அணியினை சரிவில் இருந்து மீட்டெடுத்தது.

ரெய்னா 88 பந்துகளில் 43 ஓட்டம் எடுத்து ஆட்டம் இழந்தார். பின்னர் வந்த தமிழக வீரர் அஸ்வினும் தோனியும் அணியினை கௌரவமான நிலைக்கு கொண்டு சென்றனர்.

இறுதி நேரத்தில் அதிரடியாக ஆடிய தோனி தனது 8-வது சர்வதேச ஒருநாள் சதத்தினை கடந்தார். இறுதியில் இந்திய அணி 50 ஓவர்களில் 6 விக்கட் இழப்பிற்கு 227 ஓட்டத்தினை மாத்திரமே பெற்றது. தோனி ஆட்டமிழக்காமல் 113 ஓட்டத்தினையும், அஸ்வின் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டத்தையும் பெற்றனர்.

பந்து வீச்சில் யூனைட் கான் 4 விக்கெட்டையும், மொகமட் இர்பான்,மொகமட் ஹபிஸ் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

228 ஓட்டத்தினை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது ஓவரில் முதலாவது பந்தில் ஹபிசினை இழந்து தடுமாறியது. பின்னர் வந்த



அசார் அலியும் 9 ஓட்டத்துடன் ஆட்ட மிழக்க,

அனுபவ வீரர்களான யுனிக் கானும் நசிர் ஜாம்ஷெட்டும் பாகிஸ்தானை வெற்றிப் பாதை க்குச் அழைத்து சென்றனர்.

இறுதியில் பாகிஸ்தான் அணி 48 ஆவது ஓவரில் 4 விக்கெட்டினை இழந்து தனது வெற்றியிலக்கை அடைந்தது.

நசீர் ஜாம்செட் ஆட்டமிழக்காமல் 101 ஓட்டத்தினைப் பெற்றார். இது இவரது 2-வது சர்வதேச ஒருநாள் சதமாகும். யுனிஸ் கான் 58 ஓட்டத்தினைப் பெற்றார். மலிக் ஆட்ட மிழக்காமல் 34 ஓட்டம் பெற்றார்.

பந்து வீச்சில் குமார் 2 விக்கெட்டினையும் சர்மா, டிண்டா தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக இந்திய அணியின் தலைவர் தோனி தெரிவானார்.

---

## சர்வதேச அழுத்த...

யாழ்ப்பாணத்திலிருந்து படைமுகாம்களை அகற்றிக்கொள்ளுமாறு சர்வதேச சக்திகள் அழுத்தம் கொடுத்து வருவதாக யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் குறிப்பிடுகையில்,

யுத்தம் நிறைவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் புலிகளின் செயற்பாடுகள் தொடர்ந்தும் இங்கு இடம் பெற்று வருகின்றது.

இந்த விடயம் இராணுவத்திற்குத் தெரியும். இதனால் இராணுவம் விழிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

வடக்கில் இருந்து இராணுவத்தை அகற்றிக் கொள்ளுமாறு அமெரிக்கா, பிரித்தானியா போன்ற சர்வதேச நாடுகள் தொடர்ச்சியாக இவ்வாறு வலியுறுத்தி வருகின்றன.

அவர்களின் அந்த அழுத்தத்திற்கு நாங்கள் அடிபணியத் தயாரில்லை.

1995-ம் ஆண்டில் அந்தச் சூழலில் தனியார் இடங்களில் இராணுவ முகாம்கள் அமைத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் தற்போது கிரமானமுறையில் அரசாங்க காணிகளிலேயே இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுவருவதாகவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

இதே வேளை,யாழில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு இந்தியாவில் இராணுவப் பயிற்சிகளை வழங்க விடுதலைப்புலிகள் முயற்சித்துள்ளதாக இராணுவத் தளபதியை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய-இலங்கை புலனாய்வுப் பிரிவினர் கூட்டாக மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் இந்தத் தகவல்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகவும் அவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது. (ந- 1)

---

## கிணற்றுக்கு...

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் மணற்காடு, குடத்தனை பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமி எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந-1)

---

## தனியார்...

பல்கலைக்கழகங்களின் தரங்களை உயர்த்தும் நோக்கிலேயே அரசாங்கம் இத் தனியார் பல்கலைக்கழகங்களை அமைக்கும் தீர்மானங்களை முன்னெடுப்பதாகவும், மேலும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ந-8)

---

## சஞ்சீவ பண்...

கழக விடுதிக்குத் திரும்பும் போது நேற்று அதிகாலை 2 மணியளவில் சஞ்சீவ பண்டார தாக்குதலுக்குள்ளானதாக அனைத் துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

களனி பல்கலைக்கழகத்திலிருந்து 2 கிலோமீற்றர் தொலைவில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தியவர்களில் இருவர் பாதுகாப்பு அதிகாரிகள் எனத்தான் சந்தேகிப்பதாக சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தாம் விசாரணைகளை மேற்கொள்வதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ந-1)

## கிரிக்கெட் போட்டி

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 6 பேர் 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு கோப்பாய் சென்.மேரீஸ் விளையாட்டுக் கழகமும், அளவெட்டி மத்திய அணியும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இறுதிப் போட்டி எதிர்வரும் நாட்களில் நடைபெறும் எனவும், போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

---

## மாயன் முடி...

மாயன் கலண்டர் முடிந்த சில நிமிடங்களில் அதாவது 22-ந் திகதி அமெரிக்காவின் நாசா விண்வெளி மையத்தின் சூரியசக்தி கண்காணிப்பு மைய விஞ்ஞானிகள் சூரியனை படம் எடுத்தனர்.

அப்போது சூரியன் விட்டு விட்டு ஒளிர்ந்தது. இதற்கு, மாயன் கலண்டரில் குறிப்பிட்டபடி உலகம் அழிவதற்கான அறிகுறி இல்லை. சூரியனில் காந்த ஈர்ப்பு சக்தி அதிகரிப்பே இதற்குக் காரணம் என நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் மாயன் கலண்டரின் கூற்றுப்படி பூமியை வேற்றுக் கிரகம் தாக்குகிறதா? அல்லது பூமி வழக்கத்துக்கு மாறாக சுற்றத் தொடங்குகிறதா? என்பதைத் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். (ந-1)

---

## பொலிஸாரின் தடுப்...

விலகப் போகின்றேன் என தனது பெற்றோரிடம் அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

எனினும் படைத்தரப்பிலிருந்து குறித்த பெண்ணிற்கு மீண்டும் முகாமிற்கு வந்து விடுமாறு அழுத்தங்கள் வரத் தொடங்கியுள்ளது.

இந்த நெருக்கடி நிலையை சமாளிக்கவே பெற்றோர் மருத்துவர் சிவசங்கரின் உதவியை நாடியுள்ளனர்.

அதன்பின்னர் நேற்று முன்தினம் பிற்பகல் கொக்காவில் இராணுவ முகாமிற்கு அவர்கள் சென்று படைத்தரப்பினரைச் சந்தித்துள்ளனர்.

எனினும் இராணுவத்திலிருந்து விலக வேண்டுமானால் பல நிபந்தனைகள் உண்டு. உடனடியாக எந்த விலகலும் வழங்க முடியாது என படையதிகாரிகள் பெற்றோருக்கு கூறியுள்ளனர்.

அதேசமயம் அங்கு நின்ற, இராணுவத்தில் சேர்ந்த வேறு தமிழ்ப் பெண்கள் சிலரும் தம்மையும் இங்கிருந்து கூட்டிச் செல்ல ஏற்பாடு செய்யுங்கள் என மருத்துவர் சிவசங்கரை கோரியுள்ளனர்.

இராணுவத்தில் இணைந்திருக்க விருப்பமில்லாத பெண்களைத் தொடர்ந்து இராணுவ முகாமில் சீருடை அணிவித்து வைத்திருப்பது முறையல்ல. அது ஒரு குற்றச்செயலாகும் என மருத்துவர் அங்கு நின்ற படையதிகாரிகளுடன் வாக்குவாதப்பட்டுள்ளார்.

இதனால் அவர்களுக்கும் இராணுவத்திற்கும் இடையில் முறுகல் நிலை உருவாகியுள்ளது.

இதனைத் தொடர்ந்து அப்பெண்ணின் பெற்றோரை வீடு செல்ல அனுமதித்த இராணுவத்தினர் மருத்துவர் சிவசங்கரை மட்டும் தடுத்து வைத்துள்ளனர்.

சுமார் 6 மணித்தியாலங்களின் பின்னரே நேற்று முன்தினமிரவு கிளிநொச்சி மாங்குளம் பொலிஸ் நிலைய பொலிஸாரிடம் அவர் கையளிக்கப்பட்டுள்ளார்.

நேற்றும் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த மருத்துவரை அவரது மனைவி சென்று பார்க்க அனுமதிக்கப்பட்டிருந்தது.

இவரது விடுத்லை தொடர்பில் பொலிஸ்மா அதிபர் எம்.கே.இலங்ககோனுக்கு மருத்துவ சங்கங்களின் தாய்ச் சங்கம் கடிதமொன்றை அனுப்பியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ந-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.தனியார் சிற்றூர்தி...

பாணம் (750, 75) சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகளுக்கும், அச்சுவேலி -யாழ்ப்பாணம் (752/1 சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகளுக்கும், நேர அட்டவணை தயாரித்து நடைமுறைப்படுத்தி வந்தோம். பின்னர் பருத்தித்துறைச் சங்கம் இணையத்திலிருந்து பிரிந்து தனியாக இயங்க ஆரம்பித்தது. இவ்விடங்களுக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நேரக் கணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர்.

இந்நிலையில் சில மாதங்களாக பருத்தித்துறை சங்கத்திற்கும் அச்சுவேலி சங்கத்தின் சிற்றூர்திகள் சேவையில் ஈடுபட்டவேளை முரண்பாடு ஏற்பட்டு கைகலப்பு ஏற்பட்டுள்ள துடன் சென்றவாரம் அச்சுவேலிச் சங்கத் தலைவருக்கு பருத்தித்துறைச் சங்கப்பேருந்து ஓட்டுநர் சேவையின் போது இடையில் வைத்து தாக்கியுள்ளனர்.

அதே போன்று நேற்றும் சேவையின் போது முரண்பாடு ஏற்பட்டு பருத்தித்துறை சங்கத்தின் நடத்துநர் ஒருவர் அச்சுவேலி சங்கத்தின் சிற்றூர்தி நடத்துநரை போத்தல் உடைத்து தாக்கியுள்ளார்.

இப்பிரச்சினைகள் தொடர்பாக முன்னரும் அரசாங்க அதிபருக்கும், உரியவர்களுக்கும் தெரியப்படுத்தியும், எமது சங்கங்கள் ஒன்றாக சேர்ந்து இயங்குவதற்கு, எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

தொடர்ந்தும் இப்பிரச்சினை நடைபெறுவதனால் எதிர்காலங்களில் பொதுமக்களுக்கு சிறந்த சேவையினை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படும்.

எனவே இப்பிரச்சினையை உரியவர்கள் தீர்த்து வைக்கும் வரை இன்றிலிருந்து யாழ் மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்கள் அனைத்தும் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். (ந-9)


A/L 2015

கலை, வர்த்தக

கணித உயிரியல் பிரிவு

ஜனவரி 05 சனி 8.00மணி

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.



புதிய முகவரி

ஹரன் ஜுவல்லர்ஸ்

நகை வைர வியாபாரிகள்

இல.217 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 6083, 0714182


## நீரில் மூழ்கி...

அ.கயின்த் (வயது-16) என்ற மாணவனே கடலில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்த வராவார். சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதா

குறித்த மாணவனும் வேறிரு மாணவர்களும் நேற்றுக்காலை வடமராட்சி கிழக்கு கடலுக்கு குளிக்கச் சென்றுள்ளனர். இதன் போது பிரஸ்தாப மாணவன் அலையின அடித்துச் செல்லப்பட்டுள்ளார். இதனால் அ மடைந்த மற்றைய இரு மாணவர்களும் சம்பவம் குறித்து பிரதேசவாசிகளுக்கு தகவல் அறிவித்துள்ளனர்.

எனினும் குறித்த மாணவனை காப்பாற்ற முடியாது போயுள்ளது. மாணவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ள

பிரஸ்தாப மாணவன் நடந்து முடிந்த பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மணற்காடு றோ.க.த.க. பாடசாலை மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-


2013இல் உதயமாகிறது!

வெற்றித்தேர்வு வளவாளர்களுடன் யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலில்

வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப்பிரிவு

தரம் 1 முதல் தரம் 5 வரை

தரம் 1, தரம் 2, தரம் 3 வாரத்தில் 4 தினங்கள் விசேட வழிகாட்டல் வகுப்புக்கள்

தரம் 4, தரம் 5 விசேட புலமைப்பரிசில் வகுப்புக்கள் வாரத்தில் 3 தினங்கள்.

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

02.01.2013 புதன் பி.ப 3.30 மணி

இடம்: நல்லூர் சயன்ஸ் அக்கடமி

(சி-1963) அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

தொடர்புகளுக்கு: 0775388471, 0773126807






NEC மணிக்கூட்டு வீ யாழ்நகர்.

A/L 2015 Tamil & English Medi

கணித உயிரியல் பிரி

ஆரம்பம் : 02-01-2013 புதன் 3.00ம

CHEMISTRY வாசு வாகீசன்

PHYSICS கருணாநி எடிசன்

Com.MATHS விமலநாகன்

BIOLOGY சுகா



**பதவி வெற்றிடம்**

சோதிட அறிவுள்ள (முக்கியம் பாவக்கிரகங்கள் கணிக்கக்கூடிய) முகாமைத்துவ பெண் உத்தியோகத்தர்கள் தேவை.

தொடர்பு: 021 567 1532

நிர்வாக உத்தியோகத்தர்
கல்யாண மாலை
(சமூக சேவை அமைப்பு)
யாழ்ப்பாணம். (இ)



நாளைய அறுவடைக்கு, இன்றைய தெரிவு சரியாக அமைந்திடட்டும்.

உங்கள் கனவு...

UK,USA,Australia,New-Zealand, Canada, Norway,Etc...

நாட்டில் உயர் கல்வியா? அல்லது உள்நாடு, வெளிநாட்டில் அதிக வருமானம் தரும் தொழில் துறையா? எதுவாக இருப்பினும்

IDFP (International Degree Foundation Program)

Computing, English, Technology, Information Technology, Sinhala மற்றும் தொடர்பாடல் கற்கைகளை உள்ளடக்கிய சர்வதேச பாடநெறி..

FREE இலவசம்



பாடநெறியில் இணையும் முதல் 25 மாணவர்களுக்கு கணனி ஒன்று இலவசம்.

Diploma in English

ஆங்கிலத்தை சரளமாகக் கதைப்பதற்கான Workroom Based Practical English துல்லியமான உச்சரிப்பு மற்றும் பேச்சுப் பயிற்சியை உள்ளடக்கிய Spoken English பாடநெறி. 100% ஆங்கிலத்தில் கதைப்பதற்கு உத்தரவாதம்...

சர்வதேச ஆங்கிலத் தகைமைகள்...

IELTS, TOEFL, A1, B1, Etc..

அனுபவம் வாய்ந்த Colombo ஆசிரியர்களால் பயிற்சியளிக்கப்படுகிறது. உங்களின் வசதிக் கேற்ற நேரங்களில் குறுகிய காலத்தில் உத்தரவாதத்துடன் பயிற்சியை தொடரலாம்.

Computer Studies

கணனி மயப்படுத்தப்பட்ட நவீன காலத்தில் தெரிவு செய்யப்பட்ட கணனிக் கற்கைகள் அவசியமாகின்றது. எதிர்காலத்தில் எத்துறையில் தொழில் செய்வதாயினும் கணனிக் கல்வி அவசியமாகின்றது.

- MS Office
- Graphic Designing
- Web Designing
- Hardware Engineering
- Network Administration

(C-1969)

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்வருமானம் தரும் தொழில் வாய்ப்புகளை பெற்றுத்தரும் தொழில்நுட்பப் பாடநெறிகள்

- கணனி திருத்துதல்-Computer Repairing
- வீட்டு மின்னிணைப்பு-House Wiring
- கையடக்க தொலைபேசி திருத்துதல்-Mobile Phone Repairing

புதிய பிரிவுகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதால் பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

தொழில் உத்தரவாதம் தரும் இப் பயிற்சி பாடநெறி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்

Free Admission Voucher வலம்புரி

Name :..........

Address:..........

Telephone:..........

முந்துங்கள் எதிர்வரும் 2013 ஜனவரி 1 ஆம் திகதி வரை இக் கூப்பனை எடுத்துவரும் அனைத்து மாணவர்களுக்கும் பதிவுக் கட்டணம் இலவசம்.

Dip. in Mass Media

உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் வானொலி அறிவிப்பாளராவதற்கான ஓர் ஊடகவியல் பாடநெறி.

மேலதிக விபரங்களுக்கு 021 222 4728, 0777 444 225

IISEEES NALLUR CAMPUS

762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.


## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் தர்மேந்திரன் (பாபு)

(தர்ம்சன்ஸ் உரிமையாளரும், கட்டிட ஒப்பந்தக்காரரும்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பாபு என்று அன்பாக அழைக்கப்படும் தர்மலிங்கம் தர்மேந்திரன் 29.12.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பூலோகராசா திரவியம் தம்பதியரின் மருமகனும், யோகராணியின் (பேபி) ஆசைக் கணவரும், ருஜராவ் (தஜி), பிரணவராவ் (யோஜி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற திலகேந்திரன், ஸ்ரீஜமுனாதேவி (ஜமுனா, லண்டன்), வசந்தி(லண்டன்), விஜேந்திரன் (இராசன் -லண்டன்), யுவனேந்திரன் (யுவன்-லண்டன்), ரேணுகா (ரேணு-லண்டன்), இலகேந்திரன் (கண்ணன்-லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் வதனி (லண்டன்), கணேஷானந்தன் (லண்டன்), கிரிதரமோகன் (கிரி லண்டன்), பிறேமிளா (லண்டன்), உஷாஜினி (லண்டன்), உருத்திரேஸ்வர (லண்டன்), ருக்ஷா (லண்டன்) ஆகியோரின் அருமை மைத்துனரும் சுஜேந்தர், துஷேந்தர், சுமதி-புவனேந்திரன் ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், வேலரசி -கோதாண்டபாணி, கவியரசி, மகாலயன், தர்ஷன் பரண், கோகுலன், பிரியசி ஆகியோரின் அன்பு மாமனாரும், பைரவி, ஆரணன் நதினி, தவின், இஷானி ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (31.12.2012) மாலை 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

11, கதிரவேல் ஒழுங்கை,
கனகரட்ணம் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.